Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 06 ஹிஜ்ரி 1428 துல்கதா 18 (21.12.2005) புதன்கிழமை இதழ் 82

Dialog டயலொக்

kit

எந்நேரமும் என்னுடன்...

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்


WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

# பல்கலைக்குள் அத்துமீறி பொலிஸார் துப்பாக்கிச்சூடு



தாக்குதலின்போது காயமுற்ற விரிவுரையாளர் இளம்பிறையன்

யாழ்ப்பாணம் —


யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் பொலிஸார் அத்துமீறிப் பிரவேசித் து அங்கு நின்ற விரிவுரையாளர்கள், மாணவர்கள் மீது தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல்களை நடத்தியதுடன்-

விரிவுரையாளர் உட்பட இருவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர். 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் வளாகத்துக்குள் அத்துமீறி நடத்திய இந்தத் தாக்குதல் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தில் பெரும் அதிருப்தியையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

நேற்றுக்காலை சுமார் 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்திருந்த கண்டனப் பேரணி மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து -

மாணவர்களால் பல்கலைக்கழக வீதியில் சிறியளவிலான வீதித்தடை ஒன்று போடப்பட்டிருந்தது. பல்கலைக்கழக வீதியால் ஜீப் ஒன்றில் வந்த பொலிஸார் இந்த வீதித்தடையை அகற்றமுற்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)



நினைவுத் தூபியருகே பொலிஸாரால் ஏவப்பட்ட கண்ணீர்ப் புகைக்குண்டு!

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட சிப்பாய் படுகாயம்!

கொழும்பு —

வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - (12 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி தாக்குதலில் இராணுவ சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம் —

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்று மாலை 2.45 மணியளவில் இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கிரனைட் தாக்குதலில் இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளொன்றில் வந்த முகமூடி அணிந்த இருவர், (12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கள் நோர்வேயில் நடக்காது!

## அடித்துக்கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு —

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் உள்நாட்டில் அல்லது ஆசிய நாடொன்றில் தான் நடத்தப்படும். விடுதலைப் புலிகள் கோருவது போன்று ஐரோப்பிய நாடுகளிலோ, நோர்வேயிலோ நடத்தப்படமாட்டாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுக்காலை அலரிமாளிகையில் ஜே.வி.பி தலைவர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்ட உறுதி மொழியை வழங்கினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிவன்கோவிலடியில் சிப்பாய் சுட்டுக்கொலை!

## கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் பத்திரிகையாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்



# சிப்பாய் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்

யாழ்.நகரில் நேற்றிரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 10 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

நேற்றிரவு ஶ்ரீதர் தியேட்டர் பகுதியில் உள்ள ஈ.பி.டி.பி காவலரண் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதையடுத்து படையினர் தேடுதல் நடவடிக்கையில் மேற்கொண்ட போது-யாழ்.சிவன் கோவிலடிப் பகுதியில் மறைந்திருந்த ஒருவர் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரணகே தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் பிரியதர்ஷன என்ற சிப்பாய் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து நேற்றிரவு யாழ்.நகரில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள படைமுகாம்களிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் - கச்சேரியடி பழைய பூங்காவீதிச் (12 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் அமைதிப் பேரணியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து -நேற்றுக் காலை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரின் அமைதிப் பேரணியை பரமேஸ்வராச் சந்தியில் வழிமறித்த இராணுவத்தினர்- பேரணியில் ஈடுபட்டிருந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொன்சேகா பலாலியில் இருந்தபோதே பல்கலை மாணவர்கள் மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதிப் பேரணி மீது படையினர் தாக்குதல் நடத்தியபோது - இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா பலாலிப் படைத்தளத்தில் இருந்து படையதிகாரிகளுக்கு உத்தரவுகளைப் பிறப்பித்ததாகத் தெரியவருகிறது.

யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராயவும் - பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து மீளாய்வு செய்யவுமே இராணுவத் தளபதி நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணம் வந்திருந்ததாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன.

விமானம் மூலம் பலாலி விமானப் படைத்தளத்துக்கு வந்த லெப்.ஜெனரல் (12 ஆம் பக்கம் பார்க்க)



யாழ். படைத் தளபதி ஜி.ஏ.சந்திரசிறியுடன் சரத் பொன்சேகா

# அரசும் புலிகளும் இணங்கினால் எந்த இடத்திலும் பேசத் தயார்!

## பாலாவிடம் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

லண்டன்

விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் இணக்கம் தெரிவித்தால் ஆசியாவிலோ அல்லது ஐரோப்பாவிலோ எந்த இடத்திலும் பேச்சுக்களை நடத்த தமது நாடு தயாராக இருப்பதாக நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்தார்.

லண்டனில் நேற்று கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயங்களை அவர் தெரிவித்தார்.

லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனான நேற்றைய சந்திப்புக் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் போர் (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2849999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# ஆலயங்களுக்கு புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பு

வடமராட்சி

பருத்தித்துறை கற்கோவளம் வீரபத்திரர் கோவில், கும்பி அம்பாள் கோவில் ஆகியவற்றில் கட்டட நிர்மாணப் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

இரண்டு கோவில்களின் கட்டட நிர்மாணப் பணிகள் மிக விரைவாக இடம்பெற்று வருவதாகவும், விரைவில் கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறுமெனவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, கோவிலுக்குச் செல்லும் வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. ஆலயங்களில் கும்பாபிஷேக நிகழ்வுகளை முன்னிட்டு ஆலய வீதிகளை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஆலய நிர்வாகத்தி னர் கோரியுள்ளனர்.

# புதிய கட்டடத் திறப்பு விழா

வடமராட்சி

சுனாமி அனர்த்தத்தின் ஓராண்டு நிறைவையொட்டி ஏ.எஸ்.பி போர்த்துக்கல் நிறுவனத்தின் அனுசரணையுடன், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் புனரமைக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு, பிரசவ விடுதி ஆகியவற்றின் திறப்பு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.குமாரவேற்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

# வெளிவாரிப் பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம்

பேராதனை பல்கலைக்கழகம் யாழ்.பல்கலைக் கழத்தில் நடத்தவிருந்த வெளிவாரிப் பரீட்சைகள் அனைத்தும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூயில் நடைபெறும் என பேராசிரியர் இரா வை. கனகரத்தினம் தெரிவித்தார். பரீட்சைக்கு தோற்றும் அனைத்து மாணவர்களும் பரீட்சை தினங்களில் வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான சகல கல்விச் செயற்பாடுகளும் 01.01.2006 வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் மீண்டும் 02.01.2006 அன்று ஆரம்பமாகும்.

பதிவாளர் (சி.4928) 20.12.2005


சுன்னாகம் நாகம்ஸ்




இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
அக்‌ஷன் கிங்அர்ஜுன், நமீதா மற்றும் பலர் நடித்த
தற்காலிக புதியநேர மாற்றம்
காட்சிகள்:- காலை 11.00 ,3.00, 7.00 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், சுகன்யா, நெப்போலியன் நடித்த
அடி தடி
காட்சிகள் 11.00, 2.45, 5.00 (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக
சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு
காட்சிகள்
10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
ஷாம், சினேகா, அபர்ணா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
ABCD
காட்சிகள்;-10.30, 2.00 (புதிய நேரம்)
Super Star Hero
TOM CRUISE in
WAR OF THE WORLD
காட்சிகள்;-5.15, 8.15, (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசன்னா, மீராஜஸ்மின் மற்றும் பலர் நடித்த
கஸ்தூரிமான்
காட்சிகள்:-10.30,2.30, 6.30 , 9.30 (பு.நேரம்)


அரி ஓம் நாராயணாயநம



# மோட்சதீப அழைப்பு

பேரன்புடையீர்!

கடந்த 11.12.2005 ஞாயிற்றுக்கிழமை சமாதியடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

கலாநிதி அருட்கவியரசு

## சீ.விநாசித்தம்பிப் புலவர்

அவர்கள்

மஹா சமாதி எய்தியதை முன்னிட்டு எதிர்வரும் 22.12.2005 வியாழக்கிழமை அன்று அன்னசுரபி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அஞ்சலிப் பிரார்த்தனையிலும், திருவருள் சக்தி நிறைந்த பேராளர், தேகம் நீங்கிய நிலையில் இறைவனோடு இரண்டறக் கலந்து நின்று எம் மண்ணை ஆசீர்வதிக்க வேண்டியும் இறைவனைப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.


நாகேஸ்வரம்,
அளவெட்டி.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

(C/4924)

# மரண அறிவித்தல்







அமரர்

## திரு.செல்லையா தம்பித்துரை

(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார், Magistrate Courts, கொழும்பு கப்பல்துறை பிரதம அத்தியட்சகர்)

182, சேர் பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் 'ராஜ்குடில்', ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பித்துரை அவர்கள் 14.12.2005 புதன்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னையா செல்லத்துரை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற செல்லையா சீவரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும் பராசக்தியின் அன்புக் கணவரும், புவிராஜ் (ராஜன் - கனடா), பிருதிவிராஜ் (ரஞ்சன் - லண்டன்), சஞ்சீவராஜ் (குட்டி - லண்டன்), சண்முகராஜ் (தயாளன் - கனடா), பகீரதராஜ் (ஜெயன் - பகீர் - world vision,முல்லைத்தீவு) சுகுணராஜ் (சுதன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தி, சந்திரபவானி, தர்ஷினி, கோகிலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆராதிகா, அர்ச்சுனராஜ், ராதவி, டிலன் ஆகியோரின் அருமைப் பேரனும், திருமதி மனோரஞ்சிதமலர் சீவரத்தினம் அவர்களின் மைத்துனரும் சீ.செல்வநாயகம் (செல்வா - சமுர்த்தி முகாமையாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் கனனி விரிவுரையாளர் IBMS) அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2005) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக 11.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ராஜ்குடில்"
ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில். 021 222 7467, 0776142584.

தகவல்:
குடும்பத்தினர்.

(2146)

# தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி

## ஊடகவியல் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

ஊடகவியல் இன்றைய உலகை வனைகின்ற கருவியாகிவிட்டது. ஆனால், தமிழ் ஊடகவியலில் முறைமைசார் ஊடகவியலாளர்களுக்கு மிகுந்த பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்கு தீர்வு காணும் நோக்கிலும், ஆரோக்கியமானதொரு ஊடகச் சூழலை ஏற்படுத்தும் நோக்குடனும் தமிழ் ஊடகவியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்கைநெறி வார இறுதி நாட்களில் ஒரு வருடத்துக்கு நடைபெறும். விரிவுரை, செய்முறை, செயல் விளக்கம், களப்பயிற்சி, கள ஆய்வு என்ற ரீதியில் கற்கை இடம்பெறும். கற்பித்தலும், வழிகாட்டலும் நவீன சாதனங்களின் பிரத்தியேகத்துடன் துறைசார் அனுபவர்களால் நடத்தப்படும்.

முதற்கட்டமாக ஊடகவியல் சான்றிதழ் கற்கைநெறி 2006இல் ஆரம்பமாகின்றது. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :-**

க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ் பாடத்தில் திறமைச்சித்தி உட்பட சித்தியடைந்திருப்பதுடன் ஊடகவியலில் ஆர்வம்.

அல்லது

ஊடகத்துறையில் பணியாற்றுதல்

**கட்டணம் :-**

கற்கைநெறிக்கு 6000 ரூபா கட்டணம் அறவிடப்படும். இது மூன்று தவணைகளாகச் செலுத்தப்படலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :-**

அனைத்து விண்ணப்பங்களும் 03-01-2006 இற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக, தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி, பிரதான சாலை, அறிவியல் நகர், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பத்துடன் சுய முகவரியிடப்பட்டு தபால்தலை ஒட்டப்பட்ட 8x4 அளவுள்ள கடித உறையை இணைக்கவும்.

பிரதான சாலை,
அறிவியல் நகர், கிளிநொச்சி.

தவிசாளர்,
தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி,

# இராணுவ வன்முறைகளை நிறுத்தாமல் அமைதிப் பேச்சுகள் சாத்தியமில்லை!

## நாடாளுமன்றத்தில் மாவை சேனாதிராசா

கொழும்பு—

தமிழ் மக்கள் மீதான இராணுவ வன்முறைகள் நிறுத்தப்படாதவரை இலங்கையில் அமைதிப் பேச்சுக்கள் நடைபெறப்போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டின் முன்பாகவும் படையினர் நிற்பதால் மக்கள் அச்சத்துடன் வாழ்க்கை நடத்த வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனை படையினர் தாக்கியுள்ளதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் உள்ளிட்ட கல்வியாளர்களையும் படையினர் தாக்கியுள்ளனர்.

படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பல மாணவர்கள் படுகாயமடைந்தனர். யாழ்ப்பாணத்தில் இராணுவ வன்முறைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்து நிற்பதால் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

புங்குடுதீவில் கடற்படையினர் இளம் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி கொடூரமாகப் படுகொலை செய்துள்ளனர். இந்த அநீதிக்கு எதிராக கடற்படை முகாம் முன்பு தமிழ் மக்கள் போராட்டம் நடத்தினர்.

புங்குடுதீவின் பதற்ற நிலைமைகளைப் பார்வையிட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

படையினரின் சித்திர்வதைகளாலும், ஒடுக்குமுறைகளாலும் தமிழ் மக்கள் கட்டாய ஆயுதப் பயிற்சி பெறவேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். கிருஷாந்தி தொடங்கி இன்று தர்சினி வரையில் அரச படைகளால் பல இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

ஆகையால்தான் யாழ். மாவட்டத்திலிருந்து இராணுவம் உடனே



வெளியேற வேண்டும் என்று தமிழ் மக்கள் வலியுறுத்திவருகின்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்பால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடப்பெயர்வுக்குள்ளாகி இன்னமும் நலன்புரி நிலையங்களிலும், அகதி முகாம்களிலும் துயரமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவம் அந்த மக்களது வீடுகளையும், விவசாய நிலங்களையும் ஆக்கிரமித்துள்ளதால் அந்த மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையே உள்ளனர்.

தமிழ். மக்களின் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாதவரை தமிழ்த் தரப்பினர் அமைதிப் பேச்சுக்களில் பங்கேற்பதை அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.

தமிழ்மக்கள் மீதான இந்த ஒடுக்குமுறைகளை முதலில் அரசாங்கம் நிறுத்த வேண்டும். அதன் பின்னரே அமைதிப் பேச்சுக்களை நடத்தலாம் என மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

# சர்ச்சைக்குரிய மின்திட்டங்கள் சீராக்கப்படும்

கொழும்பு—

சர்ச்சைக்குரிய நுரைச்சோலை மற்றும் மேல்கொத்தமலை மின்திட்டங்களை அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் என்று மின்சக்தி அமைச்சர் ஜோன் செனிவிரட்ன தெரிவித்தார்.

இந்த மின்திட்டங்களுக்கு எதிர்ப்புகள் இருந்தபோதும், அரசாங்கம் இந்த முன்னெடுக்கும் என்றும், அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சி இலக்கான 8 வீதத்தை அடைவதற்கு இந்தத் திட்டங்கள் அவசியம்.

டீசல் மின் உற்பத்தியாளர்கள்தான் இந்த எதிர்ப்புகளுக்குப் பின்னணியில் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இரு அமைச்சர்களின் பதவி பறிக்கப்படும்?

கொழும்பு—

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத 2 அமைச்சர்களின் பதவி பறிக்கப்படக்கூடும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்க செயற்பாடுகளின் மீதான வாக்கெடுப்பில் அமைச்சர்கள் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ முன்னர் அறிவுறுத்தியிருந்தார். ஆனால், அதை ஏற்காத இரு அமைச்சர்கள் நாடாளுமன்றில் வரவு-செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதையடுத்து அந்த இரு அமைச்சர்களிடமும் மகிந்த விளக்கம்கேட்டு பதவி பறிப்பு நடவடிக்கை மேற்கொள்ளக் கூடும் என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

# இலங்கையில் தொடரும் மோசமான சம்பவங்களுக்கு இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களே காரணம்!

## இணைத் தலைமை நாடுகள் கவலை

பிரஸல்ஸ்—

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களின் செயற்பாடுகள்தான் அண்மைய மோசமான நிலைமைகளுக்குக் காரணம் என்பதை ஏற்றுக்கொள்வதாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பெல்ஜியத் தலைநகர் பிரஸல்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் -

இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக டிசம்பர் 19 ஆம் திகதி பிரஸல்சில் இலங்கைக்கு உதவிவழங்கும் டோக்கியோ இணைத் தலைமை நாடுகளின் கூட்டம் ஆராய்ந்தது.

இலங்கையில் உள்ள மக்கள் அமைதியை விரும்புகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்திருந்த அர்த்தமுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் என்ற கோரிக்கை தொடர்பிலும் இணைத் தலைமை நாடுகள் விவாதித்தது.

இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலை வடக்கு - கிழக்கில் புறக்கணிக்குமாறு விடுதலைப் புலிகள் செய்தமையைக் கண்டிப்பதுடன், வடக்கு- கிழக்கில் அண்மையில் அதிகரித்துள்ள வன்முறைகளுக்கும் நாம் கண்டனம் தெரிவிக்கிறோம்.

அதிகரித்திருக்கும் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தங்களுக்கு உள்ள உள்ளார்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துமாறு விடுதலைப்புலிகளை கேட்டுக் கொள்கிறோம்.

அண்மைய மோசமான சூழ்நிலைகளுக்கு இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்களும் காரணம் என்பதை இணைத் தலைமை நாடுகள் ஏற்றுக்கொள்கிறது. இலங்கை அரசாங்கம் இத்தகைய குழுக்களினது செயற்பாட்டை முடிவுக்குக் கொண்டுவந்து, யுத்தநிறுத்த உடன்பாட்டை முன்னெடுத்துச் செல்வதில் தங்களுக்கு உள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செயற்படுத்துவது தொடர்பான உடனடிப் பேச்சுகள் அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற வேண்டும் என்பதை இணைத் தலைமை நாடுகள் வரவேற்கிறது. இது தொடர்பிலான ஜப்பானின் விருப்பத்தையும் நாம் வரவேற்கிறோம். இனியும் தாமதிக்காமல் இருதரப்பினரும் இது தொடர்பான பேச்சுக்களை உடனே தொடங்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க தென்னிலங்கைக் கட்சிகளினது இணக்கப்பாட்டை உருவாக்க ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளை வரவேற்கிறோம். தென்னிலங்கைக் கட்சிகள் நெகிழ்வுத் தன்மையுடன் இது விடயத்தில் செயற்பட வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம்.

அனைத்து இன மக்களினது விருப்பங்களை அவதானித்து, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாண வேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் நம்புகிறது.

அண்மைய ஆத்திரமூட்டல்களுக்கு முகம்கொடுக்கிற நிலையில் பொறுமை காக்கிற முஸ்லிம் சமூகத்தினது செயற்பாட்டை நாம் வரவேற்கிறோம்.

நோர்வே அனுசரணையாளர்கள் மீதான நம்பிக்கையை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வெளிப்படுத்தியிருப்பதை நாம் வரவேற்கிறோம். நோர்வேயின் செயற்பாடுகளுக்கு இணைத்தலைமை நாடுகள் முழுமையான ஆதரவை வழங்குகிறது.

அதிகரித்துவரும் மோசமான வன்முறைச் சூழ்நிலையிலும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொண்டுவரும் பணிகளுக்கும் இணைத் தலைமை நாடுகள் தமது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கிறது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தொடர்ந்தும் செயற்படுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண இணைத் தலைமை நாடுகளின் ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் 4 ஆம் ஆண்டையொட்டி அடுத்த இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தை இலங்கையில் நடத்த தயாராக உள்ளோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை; சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்!

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணி தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதலை சுதந்திர ஊடக அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திர ஊடக அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் அமைதியான முறையில் நடைபெற்ற பேரணியைத் தடுக்க மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஊடகவியலாளர்கள் நால்வர் காயமடைந்ததாக சுதந்திர ஊடக அமைப்புக்கு தகவல் கிடைத்துள்ளது.

பேரணியைத் தடுக்க இராணுவத்தினர் அதிகாரத்தைப் பயன்படுத்தியமை குறித்து கவலையடைகிறோம். பேரணி தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

இவ்வாறான சம்பவங்கள் மூலம் மக்கள் தகவல்களை அறிந்துகொள்ள முடியாமல் போகலாம். குறிப்பாக யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இன்றைய சூழலில் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு இருக்கவேண்டும்.

ஊடகவியலாளர்கள் தரப்பில் கூடிய கவனம் செலுத்துமாறு நாம் பாதுகாப்புத் தரப்பிடம் கேட்டுக் கொள்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.பல்கலைக்கழக சம்பவம்; அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு!



யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பதற்றநிலை தொடர்பாக ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ படையதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் பிரதேசத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அமைதியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் உத்தர விட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு பாது காப்பு உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதிப்பு!

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தினர்மீது நேற்று முனதினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகத்தவர்கள் எந்த விதமான குந்தகமும் இன்றி தமது கல்வியை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவு தரும் வகையிலேயே இந்த பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# விசேட அதிரடிப்படைப்பிரிவு கலைக்கப்பட்டுள்ளது!

கொழும்பு—

பொலிஸாரின் கீழ் செயற்பட்டுவந்த விசேட அதிரடிப் படைப்பிரிவு கடந்த சில தினங்களுக்கு முன்னர் கலைக்கப்பட்டுள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் கொலையின் பின்னர் பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட அதிரடிப்படை அமைக்கப்பட்டது.

எனினும் பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் அழுத்தத்தின் காரணமாக இந்த அதிரடிப்படைப் பிரிவு கலைக்கப்பட்டிருப்பதாக அந்தப் பிரிவின் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

இதேவேளை, இந்த அதிரடிப்படைப் பிரிவு கலைக்கப்படவில்லையென விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லியூகே தெரிவித்தார்.



# அகமதாபாத் டெஸ்ட் போட்டியில் வெற்றியின் விளிம்பில் இந்தியா

அகமதாபாத்

இலங்கைக்கு எதிராக அகமதாபாத்தில் இடம்பெற்றுவரும் 3ஆவது டெஸ்ட் போட்டியின் 3ஆம் நாளான நேற்று ஆட்டநேரமுடிவில் இந்திய அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.

நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி - நேற்று தொடர்ந்து ஆடியது. இதில் ஆட்டமிழக்காதிருந்த டில்ஷான் 27 ஓட்டங்களுடனும் முபாரக் 11 ஓட்டங்களுடனும் தமது ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

நேற்றைய தினமும் இந்திய சுழற் பந்துவீச்சாளர்களின் பந்துகளுக்கு முகம் கொடுக்கமுடியாமல் இலங்கை வீரர்களின் விக்கெட்டுக்கள் சரிந்த வண்ணம் இருந்தன. இதனால் அவ்வணி ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் திணறியது.

இந்த நிலையில் அணி மேலும் 11 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் முபாரக் மேலும் 2 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் கும்ளேயின் பந்தில் போல்டானார். இவரையடுத்து மஃரூப் இணைந்தார். ஆனால், அவராலும் பெரிதாக சோபிக்கமுடியவில்லை. அவர் 4 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்தை அவரிடமே பிடிகொடுத்து பவிலியன் திரும்பினார்.

இதனையடுத்து மலிங்க பண்டார இணைந்தார். இந்த இணைப்பாட்டம் பொறுப்புடன் ஆடியதால், அணியின் ஓட்ட எண்ணிக்கை சற்று அதிகரித்தது. எனினும், சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த டில்ஷான், ஹர்பஜனின் பந்தை கைவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். இவர் 150 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அவ்வேளை அணியின் ஸ்கோர் 198ஆக இருந்தது.

ஆனாலும் அடுத்து வந்த முரளிதரன் 3, மலிங்க 0 ஓட்டங்களைப் பெற்றதனால் இலங்கை அணி தனது முதலாவது இனிங்ஸில் 63.2 ஓவர்



களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் பண்டார 44 பந்துகளில் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஹர்பஜன் 7, கும்ளே 2, பதான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது 2ஆவது இனிங்ஸை இந்திய அணி ஆரம்பித்தது. ஆனால் அணி ஓட்டமெதையும் பெறாதிருக்கையில் - ஷேவாக் மலிங்கவினால் வெளியேற்றப்பட்டார். அடுத்து லக்ஷ்மன் வந்தார். அவரும் 5 ஓட்டங்களுடன் மஃரூப்பினால் வெளியேற்றப்பட்டார்.


இதன்பின் சச்சின் வந்தார். அணி 34 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அவர் 19 ஓட்டங்களுடன் டில்ஷானின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார். இதனையடுத்து யுவராஜ் சிங் வந்தார். ஆனால், மறுபக்கத்தில் நின்ற காம்பீர் 30 ஓட்டங்களுடன் முரளியின் சுழலில் வெளியேறினார்.

இதனையடுத்து கைவ் வந்தார். அவராலும் பெரிதாக சோபிக்கமுடியவில்லை. அவர் 9 ஓட்டங்களுடன் பண்டாரவின் பந்தில் வெளியேறினார். இதனையடுத்து டோனி இணைந்தார். அவரும் 14 ஓட்டங்களுடன் முரளியால் வெளியேற்றப்பட்டார்.

134 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டுக்களை இழந்து தவித்த இந்திய அணியை அடுத்து வந்த பதான், யுவராஜ் இணைப்பாட்டம் தலை நிமிர்த்தியது. இவர்கள் இருவரும் பொறுப்பாக ஆடியதால், அணியின் ஸ்கோர் சடுதியாக உயர்ந்தது. இவர்கள் இருவரும் ஒருநாள் போட்டியைப் போன்று அடித்து ஆடினர்.

இந்த நிலையில் அணி 174 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 83 பந்துகளில் 1 சிக்ஸர் 13 பவுண்டரிகள் அடங்கலாக 75 ஓட்டங்களைப் பெற்று சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த யுவராஜ் சிங் பண்டாரவினால் வெளியேற்றப்பட்டார்.

இதனையடுத்து பதானுடன் அகர்



கர் இணைந்தார். இவரும் சிறப்பாகவே விளையாடினார். இந்த நிலையில் அணி 198 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 34 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 27 ஓட்டங்களைப் பெற்றிருந்த பதான், முரளியின் பந்தில் போல்டாகி வெளியேறினார்.

அடுத்து கும்ளே இணைந்தார். எனினும், 43 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 48 ஓட்டங்களைப் பெற்றிருந்த அகர்கர் - அணி 247 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பண்டாரவின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின் கடைசி விக்கெட்டாக கும்ளேயுடன் ஹர்பஜன் இணைந்தார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் இந்திய அணி 66 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கும்ளே 23, ஹர்பஜன் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளனர்.

பந்துவீச்சில் முரளி, பண்டார தலா 3, மலிங்க, மஃரூப், டில்ஷான் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

விளையாட்டு

# சமனிலையில் முடிவுற்ற பேர்த் முதலாவது டெஸ்ட்



பேர்த்

தென்னாபிரிக்க அணிக்கு எதிராக பேர்த்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவுற்றது. 2ஆவது இனிங்ஸில் அவுஸ்ரேலிய அணி 528 ஓட்டங்களைக் குவித்து தென்னாபிரிக்க அணி வெற்றிபெற 492 ஓட்டங்களை இலக்காக நிர்ணயித்தது.

ஞாயிற்றுக்கிழமை அவுஸ்ரேலிய அணி ஆட்டநேரமுடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 310 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஹொட்ஜ் 91, ஹுசே 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல்இருந்தனர்.

நேற்றுமுன்தினம் ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே ஹுசே மேலும் 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து சைமன்ஸ் களமிறங்கினார். இவர்கள் சிறப்பாக ஆடிக் கொண்டிருக்கையில் - 377 ஓட்டங்களை அணி பெற்றிருக்கையில் 49 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த சைமன்ஸ் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து கில்கிறிஸ்ட் இணைந்தார். எனினும், மறுபக்கத்தில் நின்ற ஹொட்ஜ் சிறப்பாக தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களை எதிர்கொண்டு ஓட்டங்களை குவிக்க அவருக்குப் பக்கபலமாக கில்கிறிஸ்டும் ஓட்டங்களைக் குவித்தார். இதனால் அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோர் கிடுகிடுவென அதிகரித்தது.




இந்த நிலையில் அணி 444 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - 58 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 44 ஓட்டங்களைப் பெற்றிருந்த கில்கிறிஸ்ட் ஆட்டமிழந்தார்.

இதன்பின் ஷேன் வோன் இணைந் தார். ஆனால், அவரால் 5 ஓட்டங் களையே பெறமுடிந்தது.

இதனையடுத்து பிறாக்கன் இணைந்தார். இந்தநிலையில் 8 விக்கெட்டுக்களை இழந்து 528 ஓட்டங்களைக் குவித்த அவுஸ்ரேலிய அணி ஆட்டத்தை டிக்ளேர் செய்தது. இதில் ஹொட்ஜ் அபாரமாக ஆடி 332 பந்துகளில் 22 பவுண்டரிகள் அடங்கலாக 203 ஓட்டங்களை எடுத்தும், பிறாக்கன் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

டெஸ்ட் போட்டிகளில் ஹொட்ஜ் பெறும் முதலாவது சதம் இதுவாகும். இதனையடுத்து 492 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேரமுடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ஆரம்ப வீரர்களான சிமித் 30, டி-வில்லியர்ஸ் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். கிப்ஸ் 17, ரூடொல்ப் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.



இந்தநிலையில் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த இவர்கள் இருவரும் சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கையில் - கிப்ஸ் 33 ஓட்டங்களுடன் லீயின் பந்தில் வோனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதையடுத்து பிறின்ஸ் இணைந்தார். ஆனால், அவர் பந்துகளை வீணடித்தாரே தவிர, ஓட்டங்களைப் பெற முயற்சிக்கவில்லை. 45 பந்துகளில் 1 பவுண்டரி அடங்கலாக 8 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்த அவரை வோன் வெளியேற்றினார். இவ்வேளை அணி 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அடுத்து கெம்ப் இணைந்தார். இந்த ஜோடி மிக அபாரமாக ஆடியதால், இவர்களைப் பிரிப்பதற்கு அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்கள் திணறினர். இந்த நிலையில் ரூடொல்ப் சிறப்பாக ஆடி சதமடித்தார். இவ்வேளை அணி 250 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 166 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களைப் பெற்றிருந்த கெம்ப் - வோனின் பந்தில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பௌச்சர் இணைந்தார். எனினும், தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் நேற்றைய ஆட்டம் நிறைவடைந்ததால், இந்தப் போட்டி சமனிலையில் முடிவடைந்தது.

இதில் ரூடொல்ப் 102, பௌச்சர் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் வோன் 3, பிறாக்கன், லீ இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களையும், 2ஆவது இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 528 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தென்னாபிரிக்க அணி தனது முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 296 ஓட்டங்களையும், 2ஆவது இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 287 ஓட்டங்களையும் பெற்றிருந்தது.

# பாகிஸ்தான் 13 ஓட்டங்களால் இங்கிலாந்தை தோற்கடித்தது

ராவல்பிண்டி

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் ராவல்பிண்டி மைதானத்தில் இடம்பெற்ற 4ஆவது சர்வதேச ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் ஆரம்ப வீரர்களாக சல்மான் பட் மற்றும் கம்ரன் அக்மல் ஆகியோர் களமிறங்கினர்.

இந்த நிலையில் அணி 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை 35 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த சல்மான் பட் ரன் அவுட்டானார்.

தொடர்ந்தும் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. அணியின் ஓட்ட எண்ணிக்கை மாறாதிருக்கும்போதே அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன.

இதில் யுனுஸ்கான் ஓட்டமெதையும் பெறாமலும், கம்ரன் அக்மல் 18 ஓட்டங்களுடனும், பிளின்ரொப் மற்றும் அன்டர்சன் ஆகியோரின் பந்துகளில் போல்டாகி வெளியேறினர்.

இதன்பின் மொகமட் யூசுப் இணைந்தார். ஆனால் அவரும் 11 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில், கபீர் அலியின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார். இதனால் பாகிஸ்தான் அணி 57 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

எனினும், அணித் தலைவர் இன்சமாமும் - சொகைப் மலிக்கும் இணைந்து அணியின் சரிவை ஓரளவு தடுத்து நிறுத்தினர்.

இந்த நிலையில் சொகைப் மலிக் 23 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பிளக்வெல்லின் பந்தில் - ஸ்ரரஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதையடுத்து அப்ரிடி வந்தார். அவரது ஆட்டத்தில் அனல் பறந்ததால், பாகிஸ்தானின் ஓட்ட எண்ணிக்கை சடுதியாக உயர்ந்தது.

எனினும், பாகிஸ்தானுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. அணி 174



ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. இதில் 33 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த அப்ரிடியும், ஓட்டமெதையும் பெறாத அப்துல் ரசாக்கும் பிளங்கெற்றின் பந்தில் போல்டாகி வெளியேறினர்.

இதையடுத்து நவீட் உல்-ஹசன் இணைந்தார். அவரும் 13 பந்துகளில் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 17 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - கபீர் அலியின் பந்தில் கொலிங்வூட்டிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த சொகைப் அக்தர், மொகமட் சமி இருவரும் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்கவே பாகிஸ்தான் அணி 47.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களையே பெற்றது.

இதில் இன்சமாம் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பிளின்ரொப், அன்டர்சன், பிளங்கெற் மற்றும் கபீர் அலி நால்வரும் தலா 2 விக்கெட்டுக்களையும், பிளக்வெல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 211 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலபமான இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அந்த அணி சார்பாக ட்ரெஸ்கொதிக் மற்றும் பிரியர் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

அணி 13 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. இதில் பிரியர் 6, ஸ்ரரஸ் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

அடுத்துவந்த சோலங்கியும் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதன்பின் வந்த பிளின்ரொப் நிலைத்து நின்று ஆடியபோதிலும், அணி 70 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - ட்ரெஸ்கொதிக் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து கொலிங்வூட் இணைந்தார். ஆனால் அவரும் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதன்பின் பிளின்ரொப்பும் அணி 99 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் வீழ்த்தப்பட்டதையடுத்து இங்கிலாந்தின் வெற்றிக் கனவு பறிபோனது. இதில் இவர் 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்துவந்த ஜோன்ஸ் 12, பிளங்கெற் 7, பிளக்வெல் 29, கபீர் அலி 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 48.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் அப்ரிடி 3, நவீட் உல் - ஹசன் 2, அக்தர், சமி, மற்றும் அர்ஷத் கான் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.


5 போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் தொடரில் 3:1 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் தொடரைக் கைப்பற்றியது.

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை




1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடு இடுக.


1. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பொருள்களை இரண்டு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.




இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) C,D | A,B (2) B,C | A,D (3) B,D | A,C


2. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.





இக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A,D | C,E | B,F (2) A,E | B,C | D,F (3) C,F | B,D | A,E

3. இந்த உருவைப் பூரணப்படுத்துவதற்குக் கீழே தரப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து பயன்படுத்தக் கூடிய பகுதியைத் தெரிவு செய்க.





4. இந்த உருக்களின் நிரையிலே அடுத்ததாக வரவேண்டிய பொருத்தமான உருவைக் கீழே தரப்பட்டுள்ள உருக்களிலிருந்து தெரிவு செய்க.





5 ஆம் 6 ஆம் வின்ாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலங்களை அவதானித்து, வெற்றிடத்துக்குப்(?) பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவு செய்க.

5.




(1) 50 (2) 40 (3) 30


6.




(1) 39 (2) 42 (3) 46

கீழே தரப்பட்டுள்ள உருவில் பெரிய சில்லு அம்புக்குறியினால் காட்டப்பட்டுள்ள திசையில் சுழலுமெனின், A உம் B உம் எவ்வாறு வேறுபடும்?

7.




சரியான விடையைத் தெரிவு செய்க

1. A கீழ் நோக்கிச் செல்லும் அதேவேளை B மேல் நோக்கிச் செல்லும்.
2. A உம் B உம் நோக்கிச் செல்லும்.
3. A மேல் நோக்கிச் செல்லும் அதேவேளை B கீழ் நோக்கிச் செல்லும்.

பின்வரும் உரைப்பகுதியில் உருவினால் காட்டப்பட்டள்ள இடத்துக்குப் பொருத்தமான சரியான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து, 8 ஆம் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

ஒரு நாள் [உரு] குளம் ஒன்றின் மேலாகப் பறந்து செல்லும்போத அக்குளம் வரண்டிருப்பதைக் கண்டது.
அக்குளத்தில் [உரு] மிகுந்த சிரமத்துடன் உயிர் வாழ்வதைக் கண்ட கொக்கு, அதனிடம் இரக்கம் கொண்டு குளத்தின் அருகில் வந்து உன்னை [உரு] நிரம்பிய அழகிய குளத்துக்குக் கொண்டு சென்று விடவா எனக் கேட்டது.

8. [உரு] உருவுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1. கொக்கு 2. ஒரு கொக்கு 3. கொக்கினை

9. [உரு] உருவுக்குப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1. ஆமை 2. ஓர் ஆமை 3. ஆமையை

10. [உரு] உருவுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.
1. மீன்களை 2. ஒரு மீன் 3. மீன்கள்

11. இன்று காலைக் கூட்டத்தின் போது மாணவன் ஒருவன் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்து விட்டான். பின்வரும் எக்காரணத்தினால் அவனுக்கு அவ்வாறு மயக்கம் ஏற்பட்டிருக்கலாம்?
1. நேற்று மாலை வரை அவன் விளையாடியமை
2. கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாது இருந்தமை
3. அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலை வந்தமை

12. நேற்றுப் பாடசாலையில் தரப்பட்ட பயிற்சிகளைப் பூர்த்தி செய்து வராததனால் இன்று ஆசிரியை பாலனைக் குறை கூறினார். பாலன் இவ்வாறு பயிற்சிகளைப் பூர்த்தி செய்யாததற்கு உரிய நான்கு காரணங்கள் பின் வருமாறு;
(A) பாலன் இரவு வரை தொலைக்காட்சி பார்த்தமை
(B) பாலனுக்கு அப்பயிற்சிகள் பற்றிய ஞாபகம் இல்லாதிருந்தமை
(C) பாலன் நேற்றுப் பாடசாலைக்கு வராதிருந்தமை.
(D) பாலனுக்கு அப்பயிற்சிகள் கஷ்டமாக இருந்தமை

இக்காரணங்களிடையே, உண்மையில் பாலனுக்கு அப்பயிற்சியைப் பூர்த்தி செய்ய முடியாமைக்கான காரணங்கள் இடம் பெறும் விடை எது?
(1) ABC (1) ABD (1) BCD

13 ஆம், 14ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.

13. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
1. சிறிய மரம் ஒன்றைப் பெரிதானதும் வளைக்க முடியுமா?
2. ஐந்து வயதில் படித்தாலும் ஐம்பது வயதில் படிக்க முடியாது.
3. சிறுவயதில் திருத்த முடியாதவற்றை வளர்ந்த பின்னர் திருத்த முடியாது.

14. புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது.
1. சிலர் வறுமையடைந்தாலும் பொருத்தமற்ற காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.
2. சிலர் வறுமையடைந்தாலும் சுவையான உணவையே நாடுவர்.
3. சிலர் வறுமையடைந்தாலும் பிறருக்கு அடிபணியமாட்டார்கள்.

15ஆம் 16ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

15.1. வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கின்றது.
2. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லை குற்றினால் அரிசி கிடைக்கும்.
3. புடோலங்காய் ஒரு வகைக் காய்கறி, புடோலங்காய் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்படுகிறது.

16.1. நாய் வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது.
2. காகம் ஒரு பறவை. அது தாவர உண்ணி
3. மனிதன் இரண்டு கால் விலங்கு, அவன் முலையூட்டி வகைக்கு உரியவன்.

17ஆம், 18ஆம் வினாக்களில் ஒரு பொருளை உயரத்திலிருந்து நேராகப் பார்க்கும் போது, அது தோன்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருளைப் பக்கத்தில் இருந்து பார்க்கும் போது அது தோற்றும் விதத்தைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.

17.





(மறுபக்கம் பார்க்க...)

# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை


18.



கீழே சில மரத்துண்டுகள் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும் வகையிலமைந்து காணப்படுகின்றன. இதை அவதானித்து 19ஆம், 20ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.





19. பக்கம் A யிலிந்து பார்க்கும் போது இந்த மரத்துண்டுகள் தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


20. பக்கம் B யிலிருந்து பார்க்கும் போது இந்த மரத்துண்டுகள் தோற்றும் விதத்தைத் தெரிவு செய்க



(1) (2) (3)


21ஆம், 22ஆம் வினாக்களில் ஒரு கடதாசித் துண்டை நான்காக மடித்து, அதில் சில துவாரங்கள் துளைக்கப்பட்டுள்ள விதத்தை முதலில் தரப்பட்டுள்ள உரு காட்டுகிறது. இக்கடதாசித் துண்டை மீண்டும் விரிக்கும் போது தோற்றும் உருவைத் தெரிவு செய்க.

21.



(1) (2) (3)


22.



(1) (2) (3)

23ஆம், 24ஆம் வினாக்களின் பிரசினங்களை விளங்கிக் கொண்டு தரப்பட்டுள்ள உருவின் பெறுமானத்தைக் காண்க.


23.




உரு △ இன் பெறுமானத்தைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.

(1) 6 (2) 4 (3) 2

24.




உரு □ இன் பெறுமானத்தைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.

(1) 8 (2) 10 (3) 12

பின்வரும் பந்தியில் இரண்டு பகுதிகள் வெட்டி நீக்கப்பட்டுள்ளன. அவ்வாறு வெட்டி நீக்கப்பட்ட இரண்டு பகுதிகளையும் தெரிவு செய்து 25ஆம், 26ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

கிராமியப் பாடல்கள் அல்லது நாட்டார் பாடல்கள் மிகவும் எளிமையானவை [A] உள்ளபடியே சொல்லுபவை. உள்ளத்தை ஈர்க்கும் இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்தும் கிராமிய உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்துபவை. பாடல்கள் [B] பாமர மக்களுக்கும், சிற்றூர்களில் வாழ்ந்து கொண்டு தொழில் செய்து பிழைக்கின்ற ஏழை மக்களுக்கும் தருபவையாகும். இப்பாடல்கள் கிராமத்து மக்களது எடுத்துக்காட்ட உதவுபவை. குழுவாகச் சேர்ந்து வேலைசெய்யும் போதும், விழாக்கள் கொண் டாடும் போதும், களியாட்டங்களின் போதும் நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் பாடப்படுகின்றன.

25. வெற்றிடம் A இற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1) உள்ளதில் / இனிமை. மிக்கது / மக்களின் / நாட்டார்

(2) உள்ளதை / இனிமை மிக்கவை / மக்களின் / நாட்டார்

(3) உள்ளதை / இனிமை மிகுந்தது / மக்களால் / நாட்டின்


26. வெற்றிடம் இற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1) படிப்பறிவுடைய / கூட்டத்தில் / துன்பம் / கூட்டு வாழ்க்கைக்கு


(2) படிப்பறிவுள்ள / கூட்டாகத் / இன்பம் / கூட்டு வாழ்க்கை

(3) படிப்பறியாத / கூட்டாகத் / இன்பம் / கூட்டு வாழ்க்கையை


27. உருவிலுள்ள வெற்று அடைப்புகளுக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)


28. 

இந்த உருவில் காட்டப்பட்டுள்ள அட்டைத்தாள் பெட்டியைச் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அட்டைத்தாள் துண்டைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

29. நாமல் வித்தியாலயம் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ஹட்டன் கல்வி வலயத்தில் அமைந்துள்ளது. இவை கீழேயுள்ளவாறு குறியீடுகளினால் காட்டப்படுகின்றன.




பாடசாலையின் அமைவிடத்தைச் சரியாகக் காட்டும் வரிப்படத்தைத் தெரிவு செய்க.




(1) (2) (3)

30. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டு நிறைவு விழா 2005 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அவ்விழாவில் பங்குபற்றியபோது பிரியாவின் வயது 10 ஆகும். அப்பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு நடைபெறும் போது பிரியாவுக்கு எத்தனை வயதாகும்? விடையைத் தெரிவு செய்க.

(1) 40 (2) 50 (3) 60

**31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

31.1 தொடக்கம் 6 வரையுள்ள இலக்கங்களைக் காட்டும் வகையில், புள்ளிகள் இடப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் சில முகங்கள் பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ளன. இவற்றை அவதானித்து [:] பக்கத்திற்கு எதிர்பக்கத்தில் உள்ள புளிகளின் எண்ணிக்கையைக் கண்டு எழுதுக.



.............................

32. மல்வானை, கம்பளை, கந்தானை என்றும் சொற்கள் 2109, 2735, 6489 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளன எனில், கந்தானை என்னும் சொல்லை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இலக்கங்கள் யாவை? விடையை எழுதுக. .............................

33. ஒரு பெருந்தெருவை மூன்று கட்டங்களில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலாம், இரண்டாம் கட்ட வேலைகளைச் செய்வதற்கு எடுக்கும் காலத்தின் அரைவாசிக் காலம் மூன்றாம் கட்ட வேலைகளைச் செய்வதற்கு எடுக்குமெனத் திட்டமிடப்பட்டது. அப்பெருந்தெருவை அமைக்கும் பணிகள் 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு, முதலாம் இரண்டாம் கட்ட அமைப்புப் பணிகள் 2005 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டன. இப்பெருந்தெருவைத் திட்டமிட்டபடி அமைக்கும் பணி எந்த ஆண்டின் இறுதியில் முழுமையாகப் பூர்த்தியாக்கப்படும்? .............................

# படையினரின் மிலேச்சத்தனமான தாக்குதல்; கூட்டமைப்பு எம்.பி. கஜேந்திரன் கண்டனம்!



யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் மீது படையினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் வன்மையாகக் கண்டிப்பதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

தொடர்ந்து படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இராணுவ அராஜகத்தை நிறுத்தி மக்களின் வாழ்விடங்களில் இருந்தும், கல்வி நிறுவனங்களுக்கு அண்மையில் இருந்தும் உடன் வெளியேறி எமது சுதந்திரமான செயற்பாட்டிற்கு வழிவிட வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கு - அமைதியாக, அகிம்சை ரீதியில் பேரணியாகச் சென்றுகொண்டிருந்த பல்கலைக்கழக சமூகத்தினருடன் நானும் சென்றுகொண்டிருந்தேன்.

அப்போது பேரணி பரமேஸ்வராச் சந்தியைக் கடந்தசென்றுகொண்டிருந்தபோது, படையினர் பல்கலைக்கழக சமூகத்தினரை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் காயமடைந்துள்ளனர்.

மாணவர்கள்மீது படையினர் தாக்குதல் மேற்கொண்டபோது படையினருக்கு என்னை நாடாளுமன்ற உறுப்பினர் என அடையாளம் காட்டிக்கொண்டு - மாணவர்கள் மீதான தாக்குதல்களை உடனடியாக நிறுத்தும்படி கோரியபோதும், படையினர் நாடாளுமன்ற உறுப்பினர் என்றும்கூடப் பார்க்காமல் என்னையும் தாக்கிவிட்டு, மாணவர்களைத் தொடர்ந்தும் தாக்கிக் காயப்படுத்தியதில் 15 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர்.

படையினரால் அண்மைக் காலமாக பல்கலைக்கழக சமூகத்தினர் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டுவருவதும், மாணவர்களது கல்விச் செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொள்வதும் இனிமேலும் எம்மால் அனுமதிக்க முடியாது.

படையினர் இத்தகைய செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். பல்கலைக்கழக சமூகத்தின்மீது படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சம்பவமானது மிகவும் மோசமான, வெறித்தனமான முறையில் நடத்தப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடானது எமது கல்விச் சமுதாயத்தை அழித்தொழிப்பதற்கான ஒரு செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

பல்கலைக்கழகத்தைச் சுற்றி இருக்கின்ற படையினர் தமது பிரசன்னத்தை அகற்றி, மாணவர்கள்மீது மேற்கொள்ளப்படுகின்ற மிலேச்சத்தனமான செயற்பாடுகளை நிறுத்தி, மாணவர்களதும், மக்களதும் இயல்பு வாழ்வுக்கு வழிவிடவேண்டும். இல்லையேல் விளைவு விபரீதமாக இருக்கும் எனத் தெரிவித்தார்.




வடமராட்சி லயன்ஸ்கழக வெள்ளைப் பிரம்புதின விழாவிலே விழிப்புலனிழந்த பெண்மணி ஒருவருக்கு லயன்ஸ் கழகத் தலைவர் வி.சிவகுமாரன் நிதியுதவியை அன்பளிப்புச் செய்வதைப் படத்தில் காணலாம்.

# காலமாற்றங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் புதிய விடயங்களைக் கற்பிக்கவேண்டும்!

## விரிவுரையாளர் ஜெயலட்சுமி இராசநாயகம்

மட்டுவில்

கருவறை முதல் கல்லறை வரை தொடர்ந்து செல்வது கல்வி. இதற்கு ஒரு எல்லையே கிடையாது. இத்தகைய கல்வியைக் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கால மாற்றங்களுக்கேற்ப புதிய புதிய விடயங்களை - புதுப்புது உத்திகளைக் கையாண்டு கற்பிக்க வேண்டும்.

அத்தோடு அத்தகைய புதிய விடயங்களை அவர்களும் கற்க வேண்டும். இவ்வாறு மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் பரிசில் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜெயலட்சுமி இராசநாயகம் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் -

மழலைகளுக்கு கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அறிவோடு சேர்த்து பண்பையும் ஊட்டி வளர்க்கவேண்டும். இதற்கு பெற்றோரும், சமூகமும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஆசிரியரைவிட பெற்றோருடனேயே அதிக நேரத்தைப் பிள்ளை செலவிடுகின்றது. அத்துடன் தான் பழகும் சூழலையும் நன்கு அவதானித்து பிள்ளை செயற்படுகின்றது.

எனவே, பிள்ளைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களை, ஒழுக்கங்களை பெற்றோர் முதல் அனைவரும் சொல்லிக்கொடுக்க வேண்டும். அதேபோல் நடந்து காட்டவேண்டும். தன் குழந்தையைக் கொண்டே சிகரட், வெற்றிலை போன்றவற்றை கடையில் வாங்கவைத்தால் பிள்ளை அப்பா செய்வதை நான் செய்தால் என்ன தப்பு என எண்ணிவிடும். இது ஆபத்தானதொன்று.

தங்கள் பிள்ளைகளுக்கு நற்பழக்கங்களை போதிக்கவேண்டிய கடப்பாடு பெற்றோருக்கே உண்டு எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்விலே வாழ்த்துரை வழங்கிய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தனது உரையில் -

எமது வலயம் சார்பிலே முன்பள்ளி கல்வி விழிப்பூட்டல் கருத்தமர்வுகளை நடாத்தப் போவதாகவும், பாடசாலைகளை மேற்பார்வை செய்வது போல முன்பள்ளிகளையும் மேற்பார்வை செய்யப்படவுள்ளது.

அத்துடன் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் ஐந்து முன்பள்ளிகளுக்கு கட்டடங்களை அமைப்பதற்குரிய நிதிவசதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பரிசில் நாள் நினைவுரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா குழந்தை இலக்கியம் பற்றி பல எடுத்துக்காட்டுக்களை - பாடல்களைப்பாடி இலகு நடையில் மழலைகளும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அபிநயத்துடன் விளக்கமளித்தார்.

முன்பள்ளியொன்றின் பரிசளிப்பு விழாவொன்று சிறந்ததொரு ஒழுங்கமைப்புடன் நினைவுச் சிறப்பு மலர் வெளியீட்டுடன் நடத்தப்படுவது இதுவே முதற் தடவையென அங்கு உரை நிகழ்த்திய பலரும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

(24)

# மழை வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோர் காரைநகர் கடற்தொழிலாளர் சங்கத்தில்!

சுதுமலை

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஊரி, பாலாவோடை கிராம மக்கள் கடந்தவாரம் பெய்த கடும் மழையால் இடம்பெயர்ந்து பாடசாலை, கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க மண்டபங்களில் தங்கியுள்ளனர்.

ஜே - 42, ஜே - 44 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 140 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்காலிகமாக தங்கியுள்ளதுடன், இவர்களுக்கு தொடர்ச்சியாக சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதாக கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மணிகலாதன் தெரிவித்தார்.

கியூமெடிக்கா, தென் இந்திய திருச்சபையால் குறிப்பிட்டளவு உலர் உணர்வுப் பொருட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்தால் நேரடியாக எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லையெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

ஊரி அ.மி.த.க.பாடசாலை, கிராம அபிவிருத்திச் சங்கம், பேரம்பலம் முன்பள்ளி, பிட்டியெல கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு சமைத்த உணவு வழங்கவேண்டிய நிலையுள்ளதாகவும் தலைவர் தெரிவித்துள்ளார். (91)

# கலாசாரச் சீர்கேடுகளில் ஈடுபடுவோருக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பகுதிகளில் பல்வேறு கலாசாரச் சீர்கேடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கலாசாரப் பேரவை எச்சரிக்கை விடுத்துள்ளது.

நல்லூர் பகுதிகளில் வீதியால் செல்லும் பெண்கள் மீது அப்பகுதியில் கூடிநிற்கும் விசமிகள் சிலரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் அங்க சேட்டைகள் தொடர்பாக மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டதையடுத்து கலாசார பேரவை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சமூக நலனுக்கும், கலாசார விழுமியங்களுக்கும் எதிரான நடவடிக்கையில் ஈடுபடும் விசமிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

இது குறித்த முறைப்பாடுகள் தமக்கு பல்வேறு இடங்களிலிருந்து கிடைத்திருப்பதுடன் -

கலாசாரப் பேரவை தமது கவனத்தை இந்தப் பிரச்சினையில் செலுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒளிவிழா

சுதுமலை

காரைநகர் தென் இந்திய திருச்சபையின் ஒளிவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை குடத்தனை தென்னிந்திய திருச்சபை மக்களுடன், காரைநகர் தென்னிந்திய திருச்சபை மக்கள் இணைந்து ஒளிவிழா கலை நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (91)

★ ★ ★

மாதகல் பங்கின் ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு மாதகல் புனித செபஸ்ரியார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்பம்சமாக புனித அந்தோனியார் பங்கு, புனித தோமையார் பங்கு, புனித செபஸ்ரியார் பங்கு ஆகிய மூன்று பங்கு மக்களும் ஒன்றிணைந்து இந்த நிகழ்வைச் சிறப்பிக்க உள்ளனர். கிறிஸ்து பிறப்பின் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்பொழுது உள்ள சுழற்சி முறையிலான மின்வெட்டை தவிர்க்க பாவனையாளர்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என யாழ். பிராந்திய மின்பொறியியலாளர் அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாலை ஆறுமணி முதல் ஒன்பது மணிவரை மின்பாவனை அதிக அளவில் உள்ளதால் - இந்த நேரத்தில் மின்பாவனையாளர்கள் மின்பாவனையை மட்டுப்படுத்திப் பயன்படுத்துதோடு, வலுக்கூடிய மின்சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, வீடுகளில், அலுவலகங்களில், கடைகளில் தேவையற்ற விதமாக மின்குமிழ் ஒளிர்வதைத் தவிர்க்க வேண்டும்.

இதன்மூலம் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்தும்படி அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான செயலமர்வு!

சுதுமலை

வலிகாமம் கல்வி வலயத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான செயலமர்வு - மானிப்பாய் ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விஞ்ஞான ஆசிரியர்களுக்கும், 28 ஆம் திகதி புதன்கிழமை கணித ஆசிரியர்களுக்கும் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன. உடுவில், தெல்லிப்பழை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கே இந்தச் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, சண்டிலிப்பாய், சங்கானை கோட்டங்களைச் சேர்ந்த கணித பாட ஆசிரியர்களுக்கு 27 ஆம் திகதியும், விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு 28 ஆம் திகதியும் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

1A,B,1C பாடசாலைகள் தலா இரண்டு ஆசிரியர்களையும், ஏனைய பாடசாலைகள் தலா ஒரு ஆசிரியரையும் செயலமர்வில் கலந்துகொள்ள அனுப்புமாறு வலிகாமம் வலயக்கல்வி அலுவலக அதிகாரி கேட்டுள்ளார். (91)

# தற்காலிக வீடமைப்புக்கு வழங்கப்பட்ட சீமெந்துகள் நனைந்த நிலையில்!

சுதுமலை


பருத்தித்துறை கற்கோவளம் புனித நகர் கிராம மக்களின் தற்காலிக வீடுகளுக்கென வழங்கப்பட்டுள்ள சீமெந்து பைகள் நனைந்து பழுதடைந்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனத்தால் 26 குடும்பங்களுக்கு தற்காலிக வீடமைப்புக்கான சீமெந்துப் பைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் பெய்த கடும் மழையால் சீமெந்து பைகள் நனைந்து பழுதடைந்துள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட தற்காலிக வீடுகளிலேயே சீமெந்து பைகள் வைக்கப்பட்ட போதும் மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தமையாலே சீமெந்துகள் நனைந்தன.

இரண்டு கட்டங்களாக தற்காலிக வீடமைப்புக்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், மூன்றாம் கட்டமாக 26 குடும்பங்களுக்கென வழங்கப்பட்ட சீமெந்துகலே நனைந்துள்ளமையால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வீடமைப்புப் பணிகள் இடம்பெறுகின்றமை தடைப்படுமோ என மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

(91)



# குடாநாட்டில் அதிகரிக்கும் மக்கள் எழுச்சி; சிங்கள தேசம் செய்ய வேண்டியது என்ன?

## க.வே.பாலகுமாரன் விளக்கம்

இப்போது தமிழ் மக்கள் எந்த ஒரு வினைக்கும் எதிர்வினை ஆற்றக் கூடிய ஆற்றலைப் பெற்று விட்டார்கள்.

அது புலிகளுடைய போராட்டத்தினுடைய மிகப்பெரிய விழுமியமாக மாறியிருக்கிறது என, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

நீண்டகாலமாக தமிழ் மக்கள் ஒருபோதும் தங்களுக்கு எதிராகச் செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்வினை காட்டியது என்பது இல்லை.

அந்த எதிர்வினை என்பது மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் நடந்த தாக இருக்கக்கூடும். ஆனால் இன்றைய கால கட்டத்தில் எங்களுடைய எதிர் வினை என்பது உடனடியாகக் காட்டப்படுகிறது.

உலகின் எந்த மூலையிலும் எங்கள் பற்றியதாக என்ன நடந்தாலும், எதிரி எங்களுக்கு எதிராகச் செய்யக் கூடிய அனைத்துக் காரியங்களுக்குமான ஒரு எதிர்வினை நிகழ்த்துதல் என்பது இன்று தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டு வருகிறது. எதிர்வினை ஆற்றக் கூடிய அந்த ஆற்றலும், நுட்பமும் விடுதலைப் போராளிக்கு மட்டும்தான் தெரியும். இதை எதிரி அறியான். ஆகையால்தான் எதிரி எப்போதும் தோற்றுக்கொண்டே இருப்பான்.

இலங்கையில் இருக்கிறதா என்று கேட்கக் கூடிய ஜனநாயக வழிமுறையில் கூட ,அல்லது அரசியல் இராஜதந்திர நடைமுறைகள் என்றாலும் கூட இராணுவ ரீதியான வினை எங்களுக்கு எதிராகச் செய்யப்பட்டால் கூட, புலனாய்வுப் போராக இருந்தால் கூட, புவிசார் அரசியல் நிலைப்பாடாக இருந்தாலும் கூட எதற்கும் உடனடியாக பதில் கொடுக்கக் கூடிய நிலைக்கு நாங்கள் வந்து விட்டோம். இது தான் நாம் கூறும் எதிர்வினை என்பது.

உதாரணமாக விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இரு விளையாட்டுக்காரரர்கள் பந்துகளைப் பரிமாறுவதைப் போல, உடனடியாக பதிலளிக்கும் வரலாறாக எமது வரலாறு நகர்ந்து கொண்டு போகிறது.

இதனைப் புரிந்து கொள்ள முடியாததால்தான் எதிரி சிறுபிள்ளைத்தனமானவனாக நடக்கிறான். சிரிப்பதற்குக் கூட தகுதியற்ற வகையிலே அவன் நடக்கிறான்.

மகிந்த பதவியேற்றவுடனே, கிளிநொச்சி வந்துபோகும் அனுசரணையாளர்களுக்கு ஹெலி வசதியை மறுத்தார்கள். இது சிறுபிள்ளைத்தனமான செயல் அல்லவா?

அது போலவே அகாஷி போன்றவர்கள் வரக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள். அதைப்போல வழமையை விட இராணுவச் சுற்றி வளைப்புகள் செய்கிறார்கள்.

கொழும்பிலே பேசிக் கொள்கிறார் கள் - கடந்த 3 வருட காலத்தில்தான் புலிகளுடைய இந்த வளர்ச்சி நடந்தது. அதற்கு இந்த போர் நிறுத்தம் தான் காரணம் என்கிறார்கள். இந்தப் போர் நிறுத்தம் வராவிட்டால் யாருடைய வீழ்ச்சி வெளிப்பட்டிருக்கும் என்று உங்களுக்குத் தெரியும்.

இந்த மாதிரியான எதிரியினது மனநிலையை புரிந்து கொண்டால் தான் எங்களுடைய போராட்ட நகர்வை நீங்கள் அறிய முடியும் என்று நம்புகிறோம்.

கடந்த ஒரு வார காலமாக சிங்கள அரசியல் நாங்கள் ஏலவே சொன்னது போல மிகவும் சூடாக இருக்கிறது.

உதாரணமாகஅகாஷி வருகின்றார் அல்லது அகாசி வரவில்லை என்றும் கூட சொல்லலாம் ஏனெனில் அவர் கிளிநொச்சிக்கு வரவில்லை.

அகாஷியினது வருகை அல்லது வராமை, ஜப்பானிய ஈடுபாடு தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்கள், மகிந்தவின் பேச்சாளர் போல் திடீரென்று எவருக்குமே தெரியாத மகிந்தவின் தீர்வுத் திட்டம் பற்றி புகழ்ந்தமை, இந்தியத் தலையீடு இப்போது தேவையில்லை என்ற வகையில் சொன்னமை என்பது ஒரு விடயம்.

சரத்பொன்சேகா இராணுவ ரீதியாகபடும் திறமையாளர்கள் எல்லாம் ஒளித்திருந்தது போலவும் தான் அவர்களைக் கண்டு பிடித்தது போலவும் ஆளை மாற்றி ஆளை மாற்றிப் போட்டுக் கொண்டிருக்கிறார். ஏறத்தாழ ஒரு மாதம் நடைபெற்ற இத்தாவில் சண்டையின் போது ஆளை மாற்றி மாற்றிப் பார்த்தவர்கள்தான் இவர்கள்.

அதைப்போல மிகவும் கீழ்த்தரமான பரப்புரை ஒன்றை சிங்களத்திலே கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். குறிப்பாக ஐலண்ட் மற்றும் சிங்கள பத்திரிகைகள் மிகக் கீழ்த்தரமாக, சிங்கள மக்களுக்கு எல்லாமே புலிகள் தான் காரணம் என்று சொல்லக் கூடிய ஒரு பயங் கரமான-

ஒரு உண்மைநிலைக்கு மாறான செய்தியை பரப்புரை செய்து கொண் டிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஜே.வி.பியின் மீள் வருகை என்று சொல்லக்கூடிய மாதிரிப் பெட்டிக்குள் கிடந்த பாம்பு மாதிரி திரும்ப பெட்டிக்குள்ளிருந்து வெளியே வருகிறார்கள்.

அவர்களுடைய செயற்பாடுகள் விசித்திரமான செயற்பாடுகள், தங்களால் செய்ய முடியாத செயல்களை யாரையேனும் கொண்டு செய்விப்பார்கள்.

புலிகளுடன் மோதுவதை மகிந்தவுக்கு ஊடாகவும், மக்களுக்கான விடயங்களில் மகிந்தவுக்கு தாங்கள் தாம் எல்லாமே என்பது போலவும் அல்லது கண்டிப்பது போலவும் மட்டும் தலையிட்டுக் கொண்டு தங்களுக்கான காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள்.

இந்த தந்திரத்தை மகிந்த அறிய மாட்டார் என்பதில்லை. அவரும் இதற்கு மாற்றுத் தந்திரம் வகுத்து நடப்பதாக நாம் அறிகிறோம்.

இன்று எமது விடுதலைப் போராட்டத்தினது செயற்பாடுகள் அனைத்துமே தென்தமிழீழ மக்கள் பட்ட, உணர்ந்த துன்பங்களுக்கு மாற்றாக அவர்களின் விடுதலைக்கு ஒரு வழியாகத் தான் இங்கே யாழ்ப்பாணத்தில் மக்கள் எழுச்சி நடைபெறுகிறது.

உண்மையில் தென் தமிழீழத்தில் இந்த எழுச்சி நடைபெற வேண்டும். அதற்கான தடைகளை நாம் நன்கறிவோம்.

நாங்கள் ஒரு இனம், ஒரு மக்கள், ஒரு பிரதேசம் என எங்களுக்கு எது வுமே ஒன்றுதான் எங்களுக்கு எதுவித வேறுபாடும் இல்லை.

ஆகவே, இன்றைய எழுச்சியின் விளைவாக சிங்கள இராணுவம் பாதிக்கப்படப் போவதும் அதன் அவமானகரமான வெளியேற்றமும் அது அனுபவிக்கப்போகும் துன்பமும் தென் தமிழீழ மக்களுக்குச் செய்யப்படும் வினைக்கான எதிர்வினை என்பதை மிகவும் முக்கியமாகச் சொல்லுகிறோம்.

ஆகவே, புலிகளின் பின்னணியில் பக்கபலமாக இருந்து கொண்டு தமிழ் மக்கள் தங்களுடைய போராட்டத்தை வெளிப்படையாக முன்னெடுக்கத் தயாராகி விட்டார்கள். இதிலே இனி புலிகளை குற்றம் சாட்டுவதோ விரலை நோக்கி நீட்டுவதோ அர்த்தமற்றது என்பதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்.

இந்த அழிவைத் தடுப்பதற்கான இறுதி வாய்ப்பு சிங்கள மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் எழுச்சி இங்கே நடப்பது போல், அமெரிக்காவின் வியட்நாம் போருக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கியதைப் போல சிங்களத்திலேயும் எழுச்சி ஏற்பட வேண்டும் என்று இந்தக்கூட்டத்திலும்கோருகிறோம் எனத் தெரிவித்தார்.

## விசேட மருத்துவ முகாம்

மருதங்கேணி—

சுனாமி கடல் அனர்த்தத்தின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி விசேட மருத்துவ முகாம் ஒன்று மருதங்கேணி வைத்தியசாலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கவுள்ளனர்.

மருத்துவ உதவி தேவையானவர்கள் பங்குகொண்டு பயன் பெறுமாறு சுகாதார திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.



## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசெம்பர் - 21

1522: ஜூலை மாதம் 28 ஆம் திகதி ஆரம்பித்த ஓட்டோமன் போர் முடிவடைந்தது. 60,000இற்கும் மேற்பட்ட துருக்கிய வீரர்களைப் பலி கொண்ட இந்தப் போரிலேயே முதன் முதலாக வெடிகுண்டுகள் பயன்படுத்தப்பட்டன.

1846: லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி மருத்துவமனையில் முதன் முதலாக மயக்க மருந்து கொடுத்து அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. ஜேம்ஸ் சேர்ச்சில் என்பவருக்கு மயக்க மருந்து கொடுத்து, புரையோடிப்போன அவரது காலை றொபேர்ட் லிஸ்டன் என்னும் மருத்துவர் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றினார்.

1880: மான் ஹோல்டிங் தீவில் நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு முதன் முதலாக வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது. விதவைப் பெண்களுக்கும், திருமணமாகாத பெண்களுக்குமே வாக்குரிமை வழங்கப்பட்டது.

1882: லண்டனுக்கும் - பிரைட்டனுக்கும் இடையே முதன் முதலாக நெடுந்தூரத் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டது.

1911: இந்திய மத்திய வங்கி நிறுவப்பட்டது.

1923: பிரான்ஸின் விமானம் ஒன்று மத்தியதரைக் கடல் பகுதியின் மேலாகப் பறந்துகொண்டிருந்தபோது, இடி தாக்கியதால் கடலின் மீது நொறுங்கி விழுந்தது. அதனது சிறகுகள் பத்து வருடங்கள் கழித்து சிசிலி அருகே கடலில் கண்டுபிடிக்கப்பட்டன.

1948: இந்தியாவின் கல்கத்தா பகுதியில் மோத்திஜிஸ் சேரியில் ஐந்து ரூபா பணத்துடன் தனது பணியை அன்னை தெரேசா ஆரம்பித்தார்.

1956: ஒவ்வொருவரதும் நுண்ணறிவின் மட்டத்தைக் கண்டறியும் புதிய உத்தியை வகுத்துத் தந்த அமெரிக்க உளவியலாளர் லூயிஸ் மாடிஸன் டெர்மோன் மரணமடைந்தார்.

1957: இலங்கையில் பரவலாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும், மண் சரிவினாலும் 250 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயினர்.

1968: அமெரிக்கா மூன்று விண்வெளி வீரர்களுடன் அப்பலோ-8 என்னும் விண்கலத்தை ஏவியது. சந்திரனுக்கான பயணத்துக்காக மனிதர்களைச் சுமந்து சென்ற முதல் விண்கலம் இதுவேயாகும்.

1972: நிக்கரகுவாவின், மனகுவா என்ற இடத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 7000 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்.

1973: மத்திய கிழக்குப் பகுதியின் சமாதானப் பேச்சுகள் ஜெனீவாவில் ஆரம்பித்தன.

1988: இந்தியாவில் வாக்குரிமை வயதை 21இல் இருந்து 18 ஆகக் குறைக்கும் தீர்மானத்தைப் நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

1991: சோவியத் யூனியலிருந்து விலகி, தனிநாடுகளாகத் தம்மைப் பிரகடனம் செய்து கொண்ட பதினொரு குடியரசுகள் இணைந்து புதிய கொமன் வெல்த் அமைப்பை உருவாக்கின.

தொகுப்பு:- சந்துரு

# “சிறையில் பூத்த உணர்வின் ஒளி” கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா



கிளிநொச்சி—

களுத்துறைச் சிறையில் தமிழ் அரசியல் கைதியாக இருக்கும் கல்லடி றொபேட் எழுதிய “சிறையில் பூத்த உணர்வின் ஒளி” கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா - கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்றது.

எழுகலை இலக்கியப் பேரவையின் தலைவரும் எழுத்தாளருமான பு.சத்தியமூர்த்தி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இங்கு தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ காவற்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன் ஏற்றிவைத்தார்.

மங்கள விளக்கை வடகிழக்கு மனித உரிமைகள் ஆணையகத்தைச் சேர்ந்த கருணரத்னம் அடிகளார் ஏற்றி வைத்தார்.

ஆசியுரையை மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரியும், சிறப்புரையை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரனும் நிகழ்த்தினர்.

வெளியீட்டுரையை எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவகுமார் நிகழ்த்தினார். மதிப்பீட்டுரையை யோ.யோகி நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை தளபதி கேணல் ரமேஸ் வெளியிட்டு வைக்க, யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா, தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி உட்பட சட்டவாளர்கள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

களுத்துறைச் சிறையிலிருந்து தாயக உணர்வோடு கல்லடி றொபேட் எழுதிய உணர்வுமிக்க கவிதைகள் பல இந்நூலில் பிரசுரமாகியுள்ளது. சிறையின் அவலங்கள் பலவற்றுடன் சிங்கள ஆதிக்க அடக்குமுறையின் வெளிப்பாடான கவிதைகள் பலவும் இந்த நூலில் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

ஊற்றம் இலானாய் குடிசெய்து வாழ்வானை
சுற்றமாய் சுற்றும் உலகு. – திருக்குறள்

## நமது நோக்கு

# புரிந்துகொள்ளவேண்டியவர்கள் புரிந்துகொண்டால் சரி...!

சமாதானத்தின் குரல்வளையை இறுக நெருக்கத் தொடங்கியிருக்கும் அரச பயங்கரவாதத்தின் இனவெறியுடன் கூடிய நடவடிக்கைகள்-ஆயுதப் படையினரைப் பயன்படுத்தி குடாநாட்டின் அமைதி நிலையை முற்றாகச் சீரழித்து, மக்களின் இயல்பு வாழ்வுக்கு நிரந்தர அச்சுறுத்தலை ஏற்படுத்த கங்கணம் கட்டிக்கொண்டு செற்படுவது தெளிவாகி வருகிறது.

யாழ்.குடாநாட்டில் கடந்த சில வாரங்களாக அதுவும் புதிய ஜனாதிபதி, புதிய இராணுவத்தளபதி, புதிய பிரதமர் ஆகியோர் கொழும்பில் ஆட்சிப்பீட அதிகாரங்களை ஏற்றுக் கொண்டபின்னர் உருவாக்கப்பட்டு வரும் பதற்ற சூழலுக்கான முழுப்பொறுப்பும் அரசாங்கத்தையும், அரசபடையினரையுமே சாரும்.

இதனை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கல்விசார் சமூகம் மீதான இராணுவ நடவடிக்கை தொடர்பாக கூறிய கருத்துக்களேஆதாரப்படுத்துகின்றன.

இராணுவத்தினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான வன்முறைகளுக்கு சிறிலங்காவின் புதிய அரசாங்கமும், புதிய இராணுவத்தளபதியுமே பொறுப்பு என அவர் குற்றம் சாட்டியுள்ளமையை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர்- மனித உரிமைகள் பற்றிக் குரல் கொடுக்கும் தேசிய மற்றும் சர்வதேசிய அமைப்புக்கள், சமாதானம் குறித்து அதிகம் பேசும் சர்வதேச சமூகம், நோர்வேயின் அமைதிநடவடிக்கை மற்றும் அதற்கான அனுசரணைப் பணியாளர்கள் அவர்களுக்கான கருத்தியல் சமர்ப்பணமாகக் கொள்ளல் அவசியமாகும்.

இவர்கள் அனைத்துத்தரப்பினரும் இந்த மூன்றாண்டுக்கும் அதிகமான சமாதான காலத்தில் போராலும், அரச இராணுவ பயங்கரவாதத்தாலும், அதிகார வெறியுடன் கூடிய அரசியல் ஒடுக்குமுறை மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதைச் செய்துவிட்டார்கள் என்ற கேள்விக்கு பதில் ஏதுமில்லை.

வெறுமனே அறிக்கைகளை விடுத்த வண்ணம் எதையோ சாதித்தது போன்ற மாயையை ஏற்படுத்தியதைத் தவிர வேறெதுவும் இங்கு நடைபெறவேயில்லை.

தென்பகுதியில் சமாதான முயற்சிகளுக்கு எதிராக மூரக்கத்தனத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்தி, ஒரு நேச நாடடின் அதுவும் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவென சிங்கள ஆட்சியாளராலேயே அழைக்கப்பட்ட நோர்வேயன் தேசியக் கொடியை நடுச்சந்தியில் வைத்து எரித்து இந்த நாட்டின் ஜனநாயகச் சீரழிவை வெளிப்படுத்திய கலகக் காரர்களான பிக்குமாரையும், ஜே.வி.பி கிளர்ச்சிப் பேர்வழிகளையும் கலைக்க கண்ணீர் புகையை மட்டும் பயன்படுத்திய அரசும், அரச படைகளும் - யாழ்.குடாவில் இராணுவ அராஜகத்திற்கெதிராக அமைதிவழிப் போராட்டம் ஒன்றை நடத்த முற்பட்ட மாணவர்கள் மற்றும் சமூகப் பொறுப்புமிக்க கல்விசார் சமூகத்தவர், நாராளுமன்ற உறுப்பினர்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யும் நகர்வினை மேற்கொள்ள உத்தரவிட்டமையானது - இந்த நாட்டின் தெற்கில் வாழ்வோருக்கு ஒரு சட்ட அனுகுமுறையையும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு இன்னொரு வகையான சட்ட அனுகுமுறையையும் இந்த நாட்டின் பௌத்த சிங்கள பேரினவாத ஜனநாயகம் நடை முறைப்படுத்துகின்றது என்பதை அழுத்தம் திருத்தமாக உணர்த்துகிறதல்லவா...

மேன்மை தங்கிய சமாதான சமூகமே இதனை உங்கள் ஆழமான கவன ஈர்ப்புக்கு விடுக்கிறோம்.

கொழும்பில் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தால், பேரணி நடத்தினால் அதனைக் கட்டுப்படுத்த அல்லது அடக்க பொலிஸாருக்கு உத்தரவிடும் அரசுவடக்கிலோ கிழக்கிலோ அதனை இராணுவத்தினர் கையில் ஒப்படைப்பது ஏன்?

இதனையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சிந்தனைக்கே விட்டுவிடுகிறோம்.

அவர்களுக்கு இந்த நாட்டின் இனவாத ஜனநாயகத்தின் கோரமுகத்தைப் புரிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக இருக்கட்டும்.

எதுவானாலும் சமாதானம் குறித்த தமிழ் மக்களின் சகல நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புகளும் தொலைந்து போக இந்த நாட்டின் சிங்கள ஆட்சியாளர்கள் காரணமேயில்லை. அவர்கள் தமிழ் மக்களின் நம்பிக்கையை இழந்து வெகுகாலம் ஆகிவிட்டது. ஆனால், சமாதானத்தைக் கொண்டு வருகிறோம் எனக் களமிறங்கிய சர்வதேச சமூகமும், போர் நிறுத்த உடன்பாட்டை சரிவர அமுல்படுத்த அழுத்தம் கொடுக்கத் தவறிய சமாதான அனுசரணையாளர்களும் இன்றைய அச்சநிலையை வெறும் அறிக்கைகளாக தமது தலைமை அலுவலகத்துக்குஅனுப்பிவைப்பதுடன் திருப்தியடையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரும் தமிழர்களின் எதிர்பார்ப்புக்கு ஏமாற்றம் தரும் வகையிலேயே செயறபடுவதுதான் கவலை தரும் விடயம்.

ஆனால், இராணுவ ரீதியிலான ஒடுக்குமுறைக்கு தமிழர்கள் அடங்கி நடக்க வேண்டுமென அரசு கருதுமேயானால் அது போர்ப்பிரகடனம் ஒன்றை மறைமுகமாக தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்யத்தொடங்கிவிட்டது என்றுதான் அர்த்தம்.

ஆனால் பாதிப்படைவது வடக்கு - கிழக்கு மட்டுமல்ல முழு இலங்கையும்தான் இதனை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்வதும் அவசியமே!

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் உரியவிசாரணை நடத்தப்படவேண்டும்!

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை

கொழும்பு

ஊடகவியலாளர் மீது யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் வைத்து படையினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் உரிய விசாரணைகள் நடத்தவேண்டும் என்று இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

யாழ்ப்பாணத்தில் கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்வலம் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காகச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு, அவர்களது புகைப்படக் கருவிகள் போன்றன அபகரிக்கப்பட்டமையை இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகள் இடம்பெறும் போது அவை தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்கள் மீது இவ்விதம் படையினர் தாக்குவது இதுதான் முதல் தடவையல்ல. இது தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினர் ஏற்கனவே வழங்கியிருந்த உறுதி மொழிகளை மீறும் வகையிலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

சுதந்திரமான செய்தித்துறைக்குப் பெரும் அச்சுறுத்தலாகவுள்ள இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் தொடராதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை ஊடகத்துறை அமைச்சு உடனடியாக எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்வலம் தொடர்பான செய்தியைச் சேகரிப்பதற்காகச் சென்ற போதே குறிப்பிட்ட நான்கு ஊடகவியலாளர்களும் மிருகத்தனமான முறையில் தாக்கப்பட்டிருக்கின்றார்கள். அமைதியான முறையில் தமது பணியை மேற்கொண்டிருந்த இவர்கள் மீது திடீரெனத் தாக்குதலை நடத்திய படையினர் இவர்கள் தம்மை ஊடகவியலாளர்கள் என அடையாளப்படுத்திய போதிலும் அதனை அசட்டை செய்துள்ளார்கள்.

யாழ்.தினக்குரலைச் சேர்ந்த ஆ.சபேஸ்வரன், நமது ஈழநாடு பத்திரிகையைச் சேர்ந்த ஜெயராட், உதயன் பத்திரிகையைச் சேர்ந்த பிரபா, தினகரன் பத்திரிகையைச் சேர்ந்த வின்ஸ்டன் ஜெயன் ஆகியோரே படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்கலைப் படையினர் கடுமையாகத் தாக்கிய போது இவர்கள் நிலத்தில் விழுந்ததாகவும் இவ்விதம் வீழ்ந்த ஊடகவியலாளர்களை படையினர் தமது சப்பாத்துக்கால்களால் கடுமையாக மிதித்துத் தாக்கியதாகவும் தெரியவந்திருக்கின்றது. இதனைவிட ஊடகவியலாளர் ஒருவரிடம் இருந்த கமராவும் படையினரால் அபகரிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டங்கள் போன்ற மக்கள் போராட்டங்கள் நடைபெறும் போது செய்தி சேகரிக்கச் செல்லும் ஊடகவியலாளர்கள் விடயத்தில் இராணுவத்தினர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பான உறுதியான அறிவுறுத்தல்களை இராணுவத்தினருக்கு படைத்தலைமை வழங்க வேண்டும் என்பதுடன், இவ்வாறான சம்பவங்களில் ஊடகவியலாளர்கள் பாதிக்கப்படும் போது அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஊடகத்துறை அமைச்சு முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

தம்மை ஊடகவியலாளர்கள் என அடையாளப்படுத்தி அதற்கான அடையாள அட்டைகளைக் காண்பித்த பின்னரும் படையினர் தாக்கியிருப்பதையிட்டு ஊடகத்துறை அமைச்சு மௌனமாக இருந்துவிட முடியாது. இது தொடர்பாக ஊடகத்துறை அமைச்சு உரிய விசாரணைகளை நடத்தி ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் போன்ற கொந்தளிப்பான நிலையிலுள்ள ஒரு பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பானசெய்திகளை வெளிக்கொணர்வதற்கு அப்பகுதியில் பணிபுரியும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதையும், இதற்கு ஆயுதப்படையினர் அச்சுறுத்தலாக இருப்பதை சுதந்திர ஊடகத்துறையை உருவாக்க முற்படும் அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் தொடர்பாக உரிய முறையில் விசாரணைகளை நடத்தி இது போன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை ஊடகத்துறை அமைச்சு தட்டிக்கழித்துவிட முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசு பேச்சுக்களை இழுத்தடித்தால் அடுத்த ஆண்டில் யுத்தம் வெடிக்கும்!

## நாடாளுமன்றில் கிஷோர் எம்.பி

கொழும்பு

சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குவதில் அரசாங்கம் இழுத்தடிக்கும் போக்கை தொடர்ந்து கடைப்பிடித்தால் 2006 ஆம் ஆண்டு மீண்டும் யுத்தம் வெடிப்பதை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில் -

இந்த நாடு முன்னேற வேண்டுமானால் முதலில் இனப்பிரச்சனைக்கு முடிவு காணுங்கள். இல்லாவிட்டால் தென்னிலங்கை அரசு மட்டுமல்ல மக்கள் கூட தமது நிம்மதியை இழக்க வேண்டியேற்படும்.

தற்போது குடாநாட்டில் படையினரின் கொடூரத்தனமான செயல்களில் இளம் யுவதியொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். படையினரின் இச்செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

மரணவீட்டில் கலந்து கொள்ளச் சென்ற மாணவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மீது துப்பாக்கிச்சூடு மற்றும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. எமது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கூட காயமடைந்துள்ளார்.

இவ்வாறான நிலை தொடர அரசாங்கம் இடமளிக்கக் கூடாது இடமளிக்குமானால் விரும்பத்தகாத விபரீதங்கள் ஏற்படும். இவ்வாறான செயல்களைத் தடுத்துநிறுத்த வேண்டுமானால் உடனடியாக விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சை ஆரம்பியுங்கள். தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் நிலைமை மோசமடைந்தே செல்கின்றது.

எனவே சமாதானப் பேச்சில் இழுத்தடிப்புப் போக்கை அரசு தொடருமானால் 2006 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் வெடித்தே தீரும். இதை எவராலும் தடுத்து விடமுடியாது என்றும் தெரிவித்தார்.

## புங்குடுதீவு இளம் பெண் படுகொலைக்கு யாழ்ப்பாண மங்கையர்கள் கண்டனம் !

யாழ்ப்பாணம்

புங்குடுதீவில் நடந்த வல்லுறவுக் கொலைக்குச் சரியான தீர்ப்பு வழங்கப்படா விட்டால், உயிரைத்துச்சமென எண்ணி ஒவ்வொரு இராணுவத்தினரதும் குரல் வளைகளைக் கடித்துக் குதறுவோம் என யாழ்ப்பாண மங்கையர் கழகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - யாழ்ப்பாணக் குடா நாட்டில் கூலிப்படைகளோடு கைகோர்த்து சிங்களப் பேரினவாத வெறியர்களின் பட்டாளங்கள் மீண்டும் மீண்டும் புரிகின்ற கொடுமைகளை இனியும் பொறுக்க முடியாது.

கிருஷாந்தி பட்டியலில் புங்குடுதீவில் இளம்பெண் மீது மிக மோசமான பாலியல் வல்லுறவுக் கொலை தொடர்கின்றது. இராணுவ வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு எமது மண்ணை ஆக்கிரமித்து எம்மக்கள் மீது புரிகின்ற கொடூரங்களை சர்வதேச சமூகமே கண் திறந்து பார்!

ஆயுதமில்லாத அப்பாவி மக்களைத் தாக்கி, அவர்களின் உணர்வுகளை அழிக்க நினைப்பதை உடனே நிறுத்து! புங்குடுதீவில் கொலை செய்யப்பட்ட இளம்யுவதி மிகவும் மோசமாகப் பாலியல் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டு, மோசமான முறையில் கொல்லப்பட்டுள்ளார். இதையும் கண்டு இன்னும் நாம் மௌனிகளாக இருக்க முடியாது. துப்பாக்கி முனையில் எம்மை அச்சுறுத்த நினைக்கும் இராணுவத்துக்குப் பாடம் புகட்டாமல் விடமாட்டோம்.

போராடத் திராணியில்லாத காடையர்கள் எமது பெண்களின் கற்பைச் சூறையாடிக் கொலை செய்யத் துணிந்துவிட்டார்கள். இவர்களுக்கெதிராக நாம் கிளர்ந்தெழுவதற்கான ஆணையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். சர்வதேசத்தின் கைகளில் எம்மை ஒப்படைத்து தொடர்ந்தும் அடிபணிந்து வாழ முடியாது. எமது சொந்த இடங்களில் நாம் வாழ, நடமாட முடியாதென்றால் எமக்கேன் யுத்தநிறுத்தம், பேச்சு வார்த்தை? இவை எவையுமே எமக்குத் தேவையில்லை.

சுதந்திரமான பூமிக்கான நாம் எவரையும் எதிர்த்துப் போராடத் துணிந்துவிட்டோம். பெண்கள் மீது கொடூரமான வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ள இராணுவத்தை இனிமேல் அகற்றாமல் இருக்க முடியாது. எமது வீட்டில் நாம் நடமாட முடியாது. நிம்மதியாகத் தூங்க முடியாது, உண்ண முடியாது என்றால் எமக்கேன் இந்த வாழ்க்கை. துப்பாக்கி ஏந்துவதற்கு வல்லமையில்லாதவர்கள் நாங்கல்ல. பொறுமையின் எல்லையில் நாம் நிற்கின்றோம்!

துப்பாக்கிச் சன்னங்கள் புறப்படுவதற்கு முன்னரே எமது கைங்கரியம் நிறைவேறும், ஆவேசம் கொண்டுள்ள எம்மை மேலும் ஆத்திரப்பட வைத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் பாத்திரவாதிகளல்லர். எம்மைக் கட்டுப்படுத்தவும் முடியாது! என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர் மீதான படையினரின் தாக்குதல் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்!

யாழ்ப்பாணம்

தமிழ் ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும்- தாக்கியும், அச்சுறுத்தியும் அடிபணிய வைப்பதன் மூலம் உண்மைகளை மூடி மறைத்துவிடலாமென்று இலங்கை அரசாங்கமும், படையினரும் நினைப்பது தவறு என வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்கலைக்கழக மாணவர்களால் அஹிம்சை ரீதியில் முன்னெடுக்கப்பட்ட பேரணி தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற நான்கு இளம் செய்தியாளர்கள் படையினரால் கண்மூடித்தனமாக நேற்று பரமேஸ்வரா சந்தியில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர். தினகரனின் யாழ். செய்தியாளர் வின்சன் ஜெயன், யாழ். தினக்குரல் அலுவலகச் செய்தியாளர் ஆ.சபேஸ்வரன், உதயன் அலுவலக செய்தியாளர் எஸ்.பிரதீபன், நமது ஈழநாடு அலுவலகச் செய்தியாளர் ஜெ.ஜெயராஜ் ஆகியோர் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று ஈழநாதம் பத்திரிகையின் யாழ். செய்தியாளர் ஆஞ்சிலினும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளதுடன், ஊடகவியலாளர்களது தொழில் உபகரணங்களும் தாக்கிச் சேதமாக்கப்பட்டுள்ளன.

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதுமான தாக்குதல்களை நிறுத்துமாறு, தாம் பல தடவைகள் கோரி வந்துள்ளபோதும் அவை எதுவுமே வெற்றியளித்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் இதே கதை தொடர்கிறது.

இந்த வகையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கண் மூடித்தனமான தாக்குதலை வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அத்துடன் தமிழ் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் அரசினாலும், அவர்களது படைகளாலும், துணைக்குழுக்களாலும் நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்கள், மற்றும் கொலைகளை தடுத்து நிறுத்த முன்வருவதுடன், உண்மை நிலையை சர்வதேச சமூகத்துக்கு வெளிக்கொணர நடவடிக்கை எடுக்குமாறு, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை நாம் இவ்வேளையில் பகிரங்கமாக வேண்டுகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியியல்...

# மலரப்போகும் புதிய ஆண்டில் உருவாகும் பிள்ளை நேயப் பாடசாலை

(நேற்று முன்தின தொடர்ச்சி ...)

### பிள்ளை நேயப்பாடசாலை ஒன்றில் ஆசிரியரின் செயற்பாடுகள்

பிள்ளை நேயப்பாடசாலை பூரண வெற்றியை அடைந்து கொள்வதென்பது ஆசிரியர்கைகளிலேயே பெருமளவில் தங்கியுள்ளது. ஏனெனில், மாணவர்களுடன் அதிக நேரம் உறவாடுபவரும், மாணவர்களை தனித்தனியாக அறிந்து வைத்திருப்பவரும் ஆசிரியர்களேயாவர். அதனடிப்படையில் பிள்ளைநேயப் பாடசாலையொன்றில் ஆசிரியரின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்து கொள்ளவேண்டுமென நோக்குவோம்.

வகுப்பறையினுள் நுழையும் எந்த ஆசிரியரும் பாடத்தை முன் ஆயத்தத்துடன் செயற்படுவதோடு, அன்றைய பாடத்துக்கு பொருத்தமான கற்பித்தல் சாதனங்களை பயன்படுத்துவராகவும் விளங்க வேண்டும். மாணவரது பயிற்சிக் கொப்பிகளைத் திருத்தம் செய்து பொருத்தமான பெறுபேறுகளை உடன் தெரியப்படுத்துபவராகவும் ஆசிரியர் செயற்பட வேண்டும். தனது லீவு எடுக்கும் நாட்களின் எண்ணிக்கையை இயன்றளவு குறைத்து, வரவு வீதத்தை உயர்வாக பேணிக் கொள்வதோடு உரிய நேரத்தில் பாடசாலைக்கும், வகுப்பறைக்கும் சமூகமளித்து அனுபவமூடான கல்வியை மாணவர்களுக்கு எந்த நேரத்திலும் வழங்கத் தயாராக இருக்க வேண்டும். அத்துடன் வகுப்பறையில் கற்றலில் இடர்படும் மாணவர்களுக்கு பரிகார கற்பித்தலை மேற்கொள்வதற்கான ஒழுங்கு முறைகளை மேற்கொள்வதோடு, சிறப்பாகத் துலங்கிய மாணவர்களுக்கு ஊக்குவிப்புகள், பாராட்டுகள் கொடுக்கத் தவறாதவராகவும் செயற்படவேண்டும்.

கற்றல் - கற்பித்தலோடு மட்டும் நின்றுவிடாது, மாணவர்களை இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி, அவர்களது திறமைகளை வெளிக் கொணர்பவராகவும் விளங்க வேண்டும். அத்துடன் மாணவர்களின் நலன் தொடர்பாக அனைவருக்கும் வகை கூறுபவராகச் செயற்படுவதோடு, உடல், உளரீதியான தண்டனைகளை மாணவர்களுக்கு வழங்காதவராகவும் விளங்குவார்.

சக ஆசிரியர்களுடனான தொடர்புகளை உயரிய முறையில் பேணிக்கொள்வதோடு, சகபாடிகளுடன் சேர்ந்து பாடசாலைக்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளில் ஒரு போதும் ஈடுபடமாட்டார். பாடசாலையிலுள்ள மூத்த ஆசிரியர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தனது வாண்மைத்துவத்தை உயர்த்துவதையே இலக்காகக் கொண்டு செயற்படுவதோடு, தமக்கு வேண்டிய உதவிகள், ஆலோசனைகளை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்.

ஆசிரியர் தனது வகுப்பறையை எந்த நேரமும் கல்விநிலை உடையதாகவும், செயலூக்கம் மிக்கதாகவும் வைத்துக்கொள்வார். வகுப்பறைகள் மூடப்பட்ட தாகக் காணப்படுவதோடு, வகுப்பறைச் சுவர்கள் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மாணவர்களது ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டுக் காணப்படு வதுடன், குழுச் செயற்பாடுகள் மூலம் மாணவர்களது கற்றலை மேற்பார்வை செய்வார். அத்துடன் ஆரம்ப வகுப்பறையின் சுற்றாடல் மூலை, எழுத்து மூலை, வாசிப்பு மூலை, செயற்பாட்டு மேசை போன்ற சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கும். வகுப்பறையில் தளபாட வசதிகள் ஒழுங்குமுறையாகக் காணப்படுவதோடு, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் உபகரணங்களூடாக மேற்கொள்ளப்படும்.

மேலும் மாணவர்களை சமூகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற ஆசிரியர் வழிகாட்டியாகச் செயற்படுவதோடு, தானும் அந்த நிகழ்ச்சிகளில் மாணவர்களுடன் இணைந்து கொள்பவராகக் காணப்படுவார். இவ்வாறாக பிள்ளை நேயப் பாடசாலையொன்றின் உயரிய வளர்ச்சிக்காக ஆசிரியர் தன்னை என்றும் அர்ப்பணிப் புமிக்கவராக மாற்றிக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள்

பாடசாலையொன்றை முழுமையாக பிள்ளைநேயப் பாடசாலையாக மாற்றிக் கொள்வதன் மூலம் மாணவர்களது செயற்பாடுகளிலும், மனப்பாங்கிலும் பாரியளவு மாற்றம் ஏற்படும் எனப் பரிந்துரைக்கப் படுகின்றது.

பாடசாலையில் இதுவரை காலமும் இருந்ததைவிட மாணவர்களது பங்கேற்பு வீதம் உயர்வடையும். பாடசாலைக்கு இதுவரைகாலமும் ஒழுங்காக வருகை தராத மாணவர்கள் அனைவரும் தமது வரவு வீதத்தை உயர்த்திக் கொள்வதோடு, நேரம் தவறி வருகை தரும் மாணவர்களது தொகை வீழ்ச்சியடையும். அத்தோடு, மாணவர்களுக்கு பாடசாலை மீது இயல்பாகவே விருப்பு ஏற்படுவதுடன், வகுப்பறையில் இடம் பெறும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் மகிழ்ச்சிகரமாக, செயலூக்கம் மிக்கவராகவும் துலங்குவதோடு, ஏனைய இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்வார்.

ஒவ்வொரு மாணவர்களும் தமது கற்றல் தேர்ச்சிகளில் பாண்டித்திய மட்டத்தை அடைவதற்கு எத்தனித்துக் கொண்டிருப்பதுடன், தனது கற்றல் தொடர்பாக எந்த ஆசிரியரிடமும் தொடர்புளை ஏற்படுத்திக்கொண்டிருப்பார். ஆசிரியரைப் பற்றி வீட்டிலும், பாடசாலையிலும் சிறப்பாகக் கதைப்பதோடு, தன்மீது அன்பு செலுத்தும் நபராக ஆசிரியரைக் கருதிச் செயற்படுவார். பாடசாலைமீது உயரிய நம்பிக்கை கொண்டிருப்பதோடு, பாடசாலைக்குச் செல்லாது விடுதல் தனக்கு இழப்பாகும் என்ற நேரிய மனப்பாங்கை வளர்த்துக் கொள்வதோடு, பாடசாலைக்கு வருகைதரும் விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்பர். வகுப்பறைக்கு வருகை தரும் விருந்தினரை முறையாக உபசரித்து தனது கற்றல் நடத்தையின் உச்சமட்டத்தை முறையாக வெளிக்காட்டுபவராகச் செயற்படுவார். அதுமட்டுமல்லாது பாடசாலைக்கோ, வகுப்பறைக்கோ வருகைதரும் புதிய மாணவர்களிடத்தில் என்றும் சிநேகபூர்வமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்.

இவ்வாறாக பிள்ளைநேயப் பாடசாலையொன்றில் மாணவரின் செயற்பாடுகள் மிகவும் உயரிய நிலையில் காணப்படுவதோடு மட்டுமல்லாது வினைத்திறன், புத்தூக்கம், புத்துணர்ச்சி மிக்கவராகவும் அமைத்துக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இலக்கை அடைவதற்கான நடைமுறைச் சாத்தியங்கள்

இந்தக் கட்டுரையின் முற்பகுதிகள் அனைத்தும் பிள்ளை நேயப் பாடசாலையொன்று எவ்வாறு அமைத்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படைத் தகவல்களைத் தெளிவுபடுத்துவதாகக் காணப்படுகிறது. தற்போது நடைமுறையிலுள்ள பாடசாலைகள் பிள்ளைநேயப் பாடசாலைகளாகச் செயற்படவில்லையா என்று அனைவருடைய மனதிலும் ஒரு சந்தேகம் எழக்கூடும். உண்மையில் அதுவல்ல பிரச்சினை. சகல பாடசாலைகளும் தமது பணிகளை மாணவர்களுக்குச் சார்பானதாக இன்னும் வினைத் திறனாக்கிக் கொள்ள வேண்டும். எனவே, இந்தச் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க் கப்படுகின்றது.



பிள்ளைநேயப் பாடசாலையொன்றில் மனித வளம், பௌதீக வளத்தின் பயன்பாடுகள் மிகவும் உயரிய நிலையில் காணப்படவேண்டுமெனவே அனைவரது எதிர்பார்ப்பாக அமைந்து கொள்கிறது. இலங்கையில் உள்ள கூடுதலான பாடசாலைகள் கிராமப்புறப் பாடசாலைகளாகக் காணப்படுவதால் இந்தப் பாடசாலைகளில் பௌதீக வளங்களோ, பௌதீகச் சூழலோ சிறப்பாக அமைந்துகொள்வதில்லை. கட்டட வசதிகளின்மை, தளபாட வசதிகளின்மை, சீரான குடிநீர் விநியோகமின்மை, மலசலகூட வசதிகளின்மை, மின்சார வசதிகளின்மை, பொருத்தமான விளையாட்டு மைதானமின்மை என அடிப்படைப் பிரச்சினைகள் பல காணப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளைப் படிப்படியாக இழிவளவாக்கிக் கொள்வதன் மூலம் கிராமப்புற பாடசாலைகளையும் பிள்ளைநேயப் பாடசாலை என்ற இலக்கை நோக்கிப் பயணிக்கச் செய்யமுடியும்.

இந்தச் செயற்திட்டத்தின் முதற்கட்டமாக அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகளை இனங்கண்டு, அந்தப் பாடசாலைகளில் குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், வகுப்பறை தொடர்பாக உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு, அவை சீர்செய்யப்பட்டு வரப்படுகின்றது. இவ்வாறாக பாடசாலைகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் சகல பாடசாலைகளையும் பிள்ளைநேயப் பாடசாலை என்ற இலக்கை நோக்கி நகர்த்த முடியும்.

மேலும் இந்தக் கட்டுரையில் குறிப்பிட்டதைப்போன்று ஏனைய வசதிகளையும் பாடசாலையில் படிப்படியாக ஏற்படுத்துவதன் மூலமும், மனித வளம், பௌதீக வளத்தின் பயன்பாடுகள் வினைத்திறன் வாய்ந்ததாக அமைந்துகொள்ளும் போது அது சாத்தியப்படக் கூடியதொன்றாகின்றது. மனித வளத்தினுள் உள்ளடங்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாடசாலையின் நலன் கருதிச் செயற்படும் நபர்கள் அனைவரும் பாடசாலையின் வளர்ச்சி கருதி ஒருமித்த கருத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதன்மூலம் எவ்வகையான ஒரு பாடசாலையையும் பிள்ளைநேயப் பாடசாலையாக இலகுவில் மாற்றியமைத்துக் கொள்ளமுடியும்.

கா.நிமலன்
உள்ளகப் பயிற்சி ஆசிரியர்

# மக்கள் மீதான தாக்குதல்கள் தொடருமானால் மாணவர்கள் ஆயுதமேந்தும் நிலை உருவாகும்

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

அப்பாவித் தமிழ்மக்களையும், மாணவர்களையும் இராணுவத்தினர் திட்டமிட்டுத் தாக்குவதும், படுகொலை செய்வதும் தொடருமானால் மாணவர்கள் ஆயுதம் ஏந்துவதை விட வேறு வழியில்லை.

எனவே, இராணுவத்தினர் மாணவர்கள் மீதான தாக்குதல்களையும், மிரட்டல்களையும் உடன் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள், மாணவர்கள், கல்விமான்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

குடாநாட்டில் அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் அநாகரிகமான இராணுவ அராஜக நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிப்பதுடன், இனிமேலும் இவ்வாறான மிலேச்சத்தனமான இராணுவ அடக்குமுறைகள் எமது பூர்வீகத் தாயகத்தில் அரங்கேறாமல் இருப்பதை உறுதிப்படுத்த அனைவரும் ஒரே அணியாக அணிதிரள வேண்டும்.

எமது தமிழ்ச் சகோதரி ஒருவரைப் புங்குடுதீவில் கடற்படையினர் மிகவும் கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி காம வெறியாட்டமாடியுள்ளனர். படுகொலை செய்தமையை நியாயம் கேட்ட புங்குடுதீவு மக்களை ஆயுதமுனையில் அடக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக மாணவ சமூகத்தையும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரையும் இராணுவத்தினர் தமது திட்டமிட்ட சதியின் மூலம் அடித்தும் உதைத்தும் தாக்கியுள்ளனர்.

தமிழ் மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றுகூடி எம் இனத்தின் சுயர்நிர்ணய உரிமையை வலியுறுத்துவதைத் தடுத்து எம் இன விடுதலைப் பாதையைத் திசைதிருப்பி குடாநாட்டை முற்றுமுழுவதுமாக இராணுவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர தற்போதைய சிங்களத் தலைமை சதித்திட்டம் தீட்டியிருப்பது மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் மூலம் தெரியவந்திருக்கிறது. இந்தச் சம்பவங்களைப் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவும், சர்வதேச சமூகமும் கண்டும் காணாததுபோல் மௌனிகளாய் இருப்பது எமக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. இனியும் நாம் எவ்வாறு பொறுமையுடன் இருக்கமுடியும்? பொங்கி எழுவோம்.

க. பொ.த சாதாரணதரப் பரீட்சை ஆரம்பித்த நாள்முதல் எந்தவித எதிர்ப்புப் போராட்டங்களையும் மாணவர்கள் மேற்கொள்ளாது அமைதி காத்தவேளையில் - குடாநாட்டு சிங்களப் பேரினவாத இராணுவம் மாணவர்களைச் சீண்டி தேடுதல், சுற்றிவளைப்புகள், மிரட்டல்கள், கைதுகள் என தனது இராணுவ ரீதியான காயை நகர்த்த முற்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ் மாணவர்களாகிய எமக்கு மிகத் தெளிவாக ஒன்றை இவர்கள் விளங்க வைத்திருக்கிறார்கள். குடாநாட்டில் நடைபெறும் அகிம்சை வழிப் போராட்டங்கள் எவையும் தீர்வுகளை எட்ட முன்னர் ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கப்படும் என்பதேயாகும். எனவே குடாநாட்டு மாணவர்களாகிய நாம் சுயசிந்தனை உடையவர்கள் என்ற வகையில் ஆயுத முனைக்கு நிகர் ஆயுத முனையே என்பதால், ஆயுத வழியில் பூர்வீகத் தாயகமாகிய குடாநாட்டில் இருந்து பேரினவாத இராணுவ வெறியர்களை வெளியேற்றி சுதந்திரமாக எமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள பொங்கி எழுவோம்.

இந்தச் சம்பவங்கள் ஒட்டுமொத்த குடாநாட்டு தமிழ்ச் சமூகத்தையும் கொதிப்படைய வைத்திருக்கிறது. இதன் மூலம் இளம் தமிழ் மாணவர் சமூகமும், மக்களும் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை முற்றுமுழுவதுமாக வெளியேற்ற வேண்டிய கட்டாய நிலைகளுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இதிலிருந்து தமிழர்கள் நாம் எம் தாயகத்தில் தனித் தலைமையின் கீழ் சுயமாக வாழவே விரும்புகின்றோம் என்பதை சிங்கள பேரினவாத அரசிற்கு சர்வதேச சமூகம் மிகத் தெளிவாக எடுத்துக்கூற வேண்டும்.

குடாநாடெங்கும் இடம்பெறும் இவ்வாறான இராணுவ அராஜகங்களுக்கு ஒருமித்த முறையில் முற்றுப் புள்ளி வைக்கப்படும் வரையில் உயர்கல்வி நிறுவனங்கள் அனைத்தும் தமது கல்வி செயற்பாடுகளை இடைநிறுத்தி எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபடுவது என முடிவெடுக்கப் பட்டுள்ளது. இதன்படி தொழில்நுட்பக் கல்லூரியின் சகல கல்விச் செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டு தமிழ் மாணவர்களின் ஏகோபித்த எதிர்ப்பையும், சிங்களப் பேரினவாதிகளுக்கும், அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துச்சொல்லி எமது சுதந்திர வேட்கையை வெளிப்படுத்துவோம்.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் பல்கலைக்கழக இராமநாதன் வீதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கி வேட்டுக்களால் அச்சமடைந்து பல்கலைக்கழக வளாகத்திற்குள் தஞ்சம் புகுந்த தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களையும், பல்கலைக்கழகத்தில் நின்ற விரிவுரையாளரையும் பொலிஸார் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கி கைது செய்தனர்.

நாளுக்குநாள் ஆத்திரமூட்டும் இராணுவ அராஜகங்களாகவே இவை அரங்கேறுகின்றன. இது மன்னிக்க முடியாத பொலிஸாரின் அராஜகமாகும். எனவே மேற்குறிப்பிட்டது போன்று ஒற்றுமையாக ஓரணியில் நின்று ஆயுதப் போராட்ட எழுச்சிக்கு வலுச் சேர்ப்பதைத் தவிர தமிழ் மாணவர்களாகிய எமக்கு வேறு வழியில்லை.

# புங்குடுதீவு இளம்பெண் படுகொலை யாழ்.கூட்டுறவுச் சபை கண்டனம்

யாழ்ப்பாணம் —

புங்குடுதீவில் கடற்படையினரின் முகாமுக்கு அண்மையில் உள்ள கிணற்றில் சடலமாகக் கண்டெடுக்கப் பட்ட பெண்ணிற்கு நிகழ்ந்த கொடூரச் சம்பவத்தை யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்ப் பெண்களினது வாழ்வை சீரழித்து, சின்னாபின்னமாக்கி அவர்களது எதிர்கால சுபீட்சமான வாழ்வை சீர்குலைக்க படையினரின் அடாவடித்தனங்கள் தலைதூக்குகின்றன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் எமது தமிழ் இளம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப் பட்டும், படுகொலை செய்யப்பட்டும் வந்துள்ளனர். இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளும் ஆயுதமுனை யிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் அப்போது தமக்கு நேர்ந்த அவலத்தை வெளிக்கொணர முடியாமல் தமக்குள்ளேயே குமுறினர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு சமாதானப் பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு, அவை இடைநடுவில் கைவிடப்பட்டு நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் இவ்வாறான சம்பவங்கள் அண்மைக் காலங்களில் தலைதூக்கி வருகின்றன.

அந்த வகையிலேயே புங்குடுதீவில் இடம்பெற்ற இளையதம்பி தர்சினி என்ற இளம் யுவதியை கடற்படையினர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி படுகொலை செய்திருப்பது தமிழ் மக்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மேலும் பொதுமக்கள் மீதும், மாணவர் மீதும் மேற்கொள்ளப்படும் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதல்களையும், அடாவடித்தனங்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

# ஊடகவியலாளரை பாதுகாக்க முடியாதுவிட்டால் அரசாங்கம் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்

## யாழ். ஊடகவியலாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

ஊடகவியலாளர்கள் தமது கடமைகளைச் செய்வதற்குச் செல்லும் வேளைகளில் அவர்கள் கடுமையான முறையில் தாக்கப்படுவதை அரசால் நிறுத்த முடியாவிட்டால் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது என பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக சமூகத்தின் அமைதிப்பேரணியின் போது செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புதிய அரசு - தமிழ் ஊடகவியலாளர் மீது தனது காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டத்தொடங்கிவிட்டது. கடந்த காலங்களில் தமிழ் ஊடகவியலாளர்களான நிமலராஜன், நடேசன், சிவராம் போன்றோர் சிங்கள ஆட்சியாளர்களாலும் கூலிப்படைகளாலும் படுகொலை செய்யப்பட்டனர் புதிய அரசும் இவ்வாறான தனது காட்டு மிராண்டித் தனத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது.

பரமேஸ்வராச் சந்தியில் தாக்கப்பட்ட உதயன், தினக்குரல், வீரகேசரி, நமது ஈழநாடு, தினகரன் செய்தியாளர்கள் தம்மை செய்தியாளர்கள் என உறுதிப்படுத்தியும்கூட இவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை நிறுத்த புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தமது அரசால் முடியாது என பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

# மகப்பேற்று உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம் —

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் யாழ்.இணைப்பு அலுவலகமும், யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்தியர்களும் இணைந்து யாழ்.மாவட்டத்திலுள்ள பருத்தித்துறை, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இலவச வைத்திய பரிசோதனையும் ஆலோசனையும் வழங்கப்பட்டது. அத்துடன் நிறைமாத கர்ப்பிணிகள் சிலருக்கு மகப்பேற்று உபகரணங்களும் (Maternity Kit) வைத்தியசாலைகளுக்கான மருத்துவ உபகரணங்களும் (Maternity Kit) வழங்கப்பட்டது.

# பல்கலைக்கழக சமூகம் மீதான தாக்குதல்; வடமாகாண அதிபர்கள் சங்கம் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், கல்விமான்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலை வடமாகாண அதிபர்கள் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் பேரணியாக போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரிடம் மகஜர் கொடுப்பதற்காகச் சென்றவேளை - பரமேஸ்வராச் சந்தியில் வைத்து படையினர் மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கிய சம்பவம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைக்காலங்களில் இராணுவ நெருக்கீடுகள் பாரிய அளவில் பெருகியுள்ள நிலையில் புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு இளையதம்பி தர்ஷினி என்னும் யுவதி படுகொலை செய்யப்பட்ட மிலேச்சத்தனத்தைக் கண்டித்து அகிம்சை வழியில் எதிர்ப்புக்களைக் காட்டுவதற்கு முனைந்த பல்கலைக்கழக சமூகத்தினர்மீது மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களை வடமாகாண அதிபர்கள் சங்கத்தினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான தாக்குதல்கள் இயல்பு நிலையைச் சீரழித்து ஈடுசெய்ய முடியாத விரோதங்களையே வளர்க்கவல்லன.

தமிழ் மக்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வரும் உயிரிழப்புக்களும், இடப்பெயர்வுகளும், சொத்திழப்புக்களும், உள நெருக்கீடுகளும் மீண்டும் முன்னரைவிடவும் மூர்க்கத்தனமாகத் தொடரும் அறிகுறிகளே தென்படுகின்றன.

இவ்வாறு இவை தொடர்வதைச் சர்வதேச சமூகமும், சம்பந்தப்பட்டவர்களும் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்தல் வேண்டும். கல்விச் சமூகத்தினர் மீதான கண்மூடித்தனமான இவ்வகைத் தாக்குதல்கள் தமிழ் மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளன.

வலிகாமத்தில் வன்முறைகளால் வெளியேற்றப்பட்ட மக்களது குடியிருப்புக்களை இல்லாதொழித்து இராணுவ நோக்கங்களுக்காக விமான நிலையத்தை விஸ்தரித்தல் முதலான செயற்பாடுகள் மனிதாபிமானத்தின் பேரால் நிறுத்தப்படல் வேண்டும். மக்களின் மனங்களை வெல்லும் வழிவகைகளே பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும். நெருக்கீடுகளை விரைந்து தடுப்பதற்குரிய செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

# மாணவர்கள் மீதான தாக்குதல் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

பல்கலைக்கழக மாணவர்களையும், கல்விமான்களையும், பத்திரிகையாளர்களையும் இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் தாக்கி தமிழினத்தை ஒட்டுமொத்தமாக அழிக்க ஆரம்பித்துவிட்டனர்.

தமிழ்மக்கள் மீதான இராணுவத்தினரின் அராஜகம் உடன் நிறுத்தப் பட்டு மக்கள் இயல்பாக வாழ்வதற்கான சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என யாழ்.நல்லூர் கோட்டத் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் - தமிழ்மக்கள், மாணவர்கள், கல்விமான்கள், பத்திரிகையாளர்கள் மீது மேற்கொண்டுவரும் கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சிங்களப் பேரினவாதிகளின் வெறியாட்டம் வெளிப்படத் தொடங்கி விட்டது. புங்குடுதீவில் யுவதியைக் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி, கொடூரமாகக் கொலைசெய்து, பல்கலைக்கழக மாணவர்களையும், கல்விமான்களையும் கண்மூடித்தனமாகத் தாக்கி எமது ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் அழிக்கப் புறப்பட்டுவிட்டது. இனியும் நாம் பொறுமை காக்க இயலாது.

அகிம்சை வழியில் உரிமையைக் கோரி நிற்கும் எம்மை ஆயுதம் கொண்டு அடக்க நினைக்கின்ற பேரினவாதத்தின் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றி எம் பிரதேசங்களை ஆக்கிரமித்து, எமது தமிழினத்தைக் கூண்டோடு ஒழித்துக்கட்ட முடிவு செய்துவிட்ட சிங்களப் பேரினவாதத்திற்கும், அதன் கைக்கூலிப் படைகளுக்கும் இது ஓர் இறுதி எச்சரிக்கையாகும். சர்வதேசத்தை மதித்து, மானுட ரீதியாக உரிமையைக் கேட்கும் எங்களுக்குப் பேரினவாதம் ஆயுத மூலமாகப் பதில் சொல்ல நினைத்தால் அதற்கு மேலாக நாம் பதிலடி கொடுப்போம்.

எமது கண்ணென மதித்து போற்றி நிற்கும் கல்வியாளர்களையும், எமது நாட்டின் எதிர்கால விளைநிலங்களான மாணவர்களையும், எமது கலாசார மேம்பாட்டின் பொக்கிசங்களையும், பெண்களையும், எமது இனத்தின் குரலாக ஒலிக்கும் பத்திரிகையாளர்களையும் கொன்றொழிக்க நினைக்கும் பேரினவாதத்தின் கபடத்தனத்தை இன்னுமா சர்வதேச சமூகம் தெரிந்துகொள்ளவில்லை.

கூலிப்படைகளைக் கொண்டு கொடூரமாக நடத்தப்பட்ட தாக்குதல்களை இனியும் எம்மால் அனுமதிக்க முடியாது. தேசவிடுதலைக்காக பல்லாயிரம் உயிர்களைப் பறிகொடுத்து நாம் நிற்கின்றோம். இனிமேல் ஒரு உயிர்கூடப் பலியாகக் கூடாது என்பதற்காகவே சர்வதேச சமூகத்திடம் மண்டியிட்டு நிற்கின்றோம்.

கல்விமான்களைக் கொன்றொழித்து, பத்திரிகையாளர்களின் குரல்வளைகளை நசுக்கி, காடைத்தனம் புரியும் காட்டுமிராண்டித்தனத்திற்கு இனியும் பாடம் புகட்டாமல் இருக்க முடியாது. தேசவிடுதலைககான பங்கும், பணியும் ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டு என்கின்ற உண்மையை எவராலும் மறுக்க முடியாது. இதனை பேரினவாதிகளும், சர்வதேச சமூகமும் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

பல்கலைக் கழகத்தை முற்றுகையிட்டு, மாணவர்களின் உணர்வுகளை அழிக்க நினைக்கின்ற சிங்களச் சிப்பாய்கள் ஆயுதம் இல்லாமல் எம்மோடு மோதிப்பார்க்கட்டும். அவர்களின் பேரினவாத வெறி, பலம் எல்லாம் எமது உரிமை உணர்வுகளுக்கு முன்னால் ஒரு தூசு. எங்களை நிராயுதபாணிகளாக்கி சிப்பாய்களை துப்பாக்கிகளுடன் மோதவிடுவது சர்வதேச சட்டத்திற்கு ஏற்புடையதா? அல்லது தர்மமானதா?

தொடராக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவத்தினராலும், கூட்டாளிக் குழுக்களாலும் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை அழிக்கப்படுகின்றது.

க.பொ.த (சா/த) பரீட்சை நடைபெறும் இக்காலத்தில் இவ்வாறான அடாவடித்தனங்கள் தமிழரின் மூளைப்பலத்திற்கு வைக்கப்படும் ஆப்பு. கல்விமீது கண்மூடித்தனமாக நடத்தப்படும் பயங்கரவாதத்திற்கு இனியும் முற்றுப்புள்ளி வைக்காமல் இருக்க முடியாது. பேனாக்கள் சுமந்த எம் கைகளைத் துப்பாக்கிகள் சுமக்கும் கைகளாக பேரினவாதம் மாற்றியமைக்கும் என்றால் அதை நாம் முழுமனதுடன் ஏற்றுக்கொள்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் இளம்பரிதியுடன் சந்தித்து பேச்சு

கிளிநொச்சி —

யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பாளராகிய யோண், செல்வி.மெத்தலின் ஆகியோர் நேற்றுக் காலை 10.30 மணியளவில் பளையில் உள்ள அரசியற்துறைச் செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச்சந்திப்பின்போது - யாழ்.மாவட்டத்தில் படையினரது அத்துமீறல்களால் ஏற்பட்டு வரும் மக்கள் மீதான நெருக்குவாரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலவரங்கள் குறித்து இளம்பரிதி விளக்கமளிக்கையில் -

போர் நிறுத்த உடன்படிக்கை செம்மையாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர். ஆனால், படைத்தரப்பு அண்மைக்காலமாக போர் நிறுத்த உடன்படிக்கையைப் புறக்கணித்து அத்துமீறல்களில் ஈடுபடுகின்றது. பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத் தப்பட்டு கொல்லப்படுகின்றார்கள்.

அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டு அவமானப் படுத்தப்படுகின்றார்கள். மக்களால் புனிதமாகக் கருதப்படுகின்ற மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் இராணுவத்தினர் ஆயுதங்களுடன் சென்று சோதனையிடுகின்றார்கள். நாகரீக வரம்பை மீறி தனியார் வீடுகளில் தேடுதல்கள் என மனித உரிமைகளையும், போர் நிறுத்த உடன்படிக்கையையும் உதாசீனப்படுத்தி படைத்தரப்பினர் நடந்துகொள்கிறார்கள்.

இத்தகைய அத்துமீறல்கள் படையினரது உணர்ச்சி வசப்படுதலின் வெளிப்பாடுகள் எனக் கருதமுடியாது. மாறாக, இவை முன்னரேயே இராணுவ உயர்பீடத்தினால் நன்கு திட்டமிட்டு அச்சுறுத்தி ஒடுக்கும் வன்முறைகளாகும். இத்தகைய மீறல்கள் போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவினால் அனைத்துலகத்தின் கவனத்துக்கும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.


மேலும், மக்கள் கொண்டிருந்த சமாதானத்தில் மேலான நம்பிக்கை, படையினரின் அடாவடித்தனங்களால் முற்றாகவே சிதைந்துவிட்டது. போர் நிறுத்த உடன்படிக்கைக்கு இந்த வகையான குந்தகங்கள் பாதகமாகவே உள்ளன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடமைகளுக்கு எவ்வகையான இடையூறுகளும் ஏற்படுத்துவது ஏற்புடையது அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

போர் நிறுத்த கண்காணிப்பாளர் யோண் இந்தச் சந்திப்பின்போது -

கடந்த சில நாட்களாக இடம் பெற்று வரும் சம்பவங்கள் குறித்து கூர்ந்து கவனிப்பதாகவும், இந்த விடயத்தை தமது உயர்பீடத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாகவும், போர் நிறுத்த உடன்படிக்கைக்கு ஊறு ஏற்படுத்தப்படமாட்டாது எனத் தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாக வும் தெரிவித்தார்.

# காங்கேசன்துறை வீதியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!



யாழ்ப்பாணம் —

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் பேரணியைத் தடுத்து நிறுத்திய படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து - நேற்றுக் காலை 10.30 மணியளவில் பாடசாலை மாணவர்கள் காங்கேசன்துறை வீதியில் மறியல் போராட்டம் செய்தனர்.

இந்துக் கல்லூரிப் பகுதியில் தடிகள், கற்கள் என்பன வீதியின் குறுக்கே போடப்பட்டு போக்குவரத்தைத் தடை செய்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் மாணவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், கலைந்து செல்லுமாறு மிரட்டினர்.

மாணவர்கள் கலையாது நிற்கவே அந்தப் பகுதிக்குப் பெரும் திரளான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு மாணவர்களை தாக்குவதற்கு ஆயத்தமான நிலையில் நின்றனர். இதனால் மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு சென்றனர்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் வீதியை மறித்து போடப்பட்ட கற்களை படையினர் அகற்றிவிட்டு காவலில் ஈடுபட்டனர்.

## பொன்சேகா பலாலியில்...

சரத் பொன்சேகா - குடாநாட்டில் நிலைகொண்டுள்ள உயர்மட்ட படையதிகாரிகளுடன் உயர்மட்டப் பாதுகாப்பு மாநாடு ஒன்றை நடத்தியதாகவும் தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, 51, 52, 53, 55 ஆவது டிவிசன்களின் கட்டளை அதிகாரிகள், பிரிகேட் தளபதிகள் மற்றும் பாதுகாப்புப் படைத் தலைமையகங்களின் கட்டளை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அத்துடன், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பென்சேகாவுக்கு 10 ஆவது சிங்க றெஜிமென்ட் படையினர் அணிவகுப்பு மரியாதை அளித்ததும் குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்புக்குழு...

செ.கஜேந்திரன் உள்ளிட்ட பலரைத் தாக்கினர்.

இதன் போது செய்தி சேகரித்துக் கொண்டிருந்த நமது ஈழநாடு செய்தியாளர் ஜெ.ஜெயராட், தினக்குரல் செய்தியாளர் ஆ.சபேஸ்வரன், உதயன் செய்தியாளர் பார்த்தீபன், தினகரன் செய்தியாளர் வின்சன் ஜெயன் ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் வைத்திருந்த கமராக்கள், அடையாள அட்டைகள், கைத்தொலை பேசிகள் படையினரால் பறிக்கப்பட்டதுடன் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும், ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை எந்தவித இடையூறுகளும் இன்றிச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் உதவவேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பிரதிநிதியிடம் மகஜர் கையளித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'சரத்பொன் சேகா நீ வழங்கிய உறுதி மொழி என்னாச்சு?, குட்டக்குட்ட குனிய நாமென்ன இழிச்ச வாய்களா?, ஊடக சுதந்திரம் இராணுவச் சிப்பாய்களின் சட்டைப் பைக்குள்ளா?, நிமாலை, நடேசனை, சிவராமைக் கொன்றீர்கள் இன்னுமா அடங்கவில்லை உங்கள் கொலைவெறி. அடக்கி ஒடுக்கி வைக்க நாம் என்ன மந்தைக் கூட்டமா?, விழவிழ எழுவோம் புதிதாய் இந்த மண்ணில்!' போன்ற வாசகங்களை உள்ளடக்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர். (111)

## பல்கலைக்குள் அத்துமீறி...

போது, மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து பொலிஸாருக்கும் மாணவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இது தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் தகவல் வழங்கினர்.

இதற்கிடையில் பொலிஸாருக்கும், மாணவர்களுக்கும் இடையில் முறுகல்நிலை தீவிரமடையவே, பொலிஸ் வாகனத்தின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டன.

இதன்பின்னர் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிறிசெல்வா தலைமையிலான சுமார் 50 பொலிஸார் பல்கலைக்கழக வாசலில் வந்து குவிந்தனர்.

இவர்கள் வளாகத்துக்குள் அத்துமீறி நுழைய முற்பட்டபோது - மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது பொலிஸார் மாணவர்கள் மீதும் விரிவுரையாளர்கள் மீதும் வளாகத்துக்குள் நுழைந்து தடியடி, துப்பாக்கிச் சூடு மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் என்பவற்றை நடத்தினர்.

இதனால் மாணவர்கள் நிலத்தில் படுத்தும், பாதுகாப்பான இடங்களுக்குள்ளேயும் ஒதுங்கிக் கொண்டதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

எனினும், மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வளாகத்தில் உள்ள கட்டடங்களில் ஓட்டைகள் காணப்படுகின்றன.

இதன்போது பல்கலைக்கழகத்தினுள் வைத்து யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் பீட இணைப்பாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் ரூபசங்கர் ஆகியோரை கடுமையாகத் தாக்கிய பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

துப்பாக்கியாலும், பொல்லுகளாலும் மற்றும் பொலிஸார் சப்பாத்துக் கால்களாலும் தாக்கப்பட்டதில் விரிவுரையாளர் இளம்பிறையனுக்கு மயக்கமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட இவரை அங்கு வைத்தும் பொலிஸார் தாக்கினர். இதனால் தனது தோள் மூட்டு எலும்பு உடைந்துள்ளதாகவும், பல்கலைக்கழக விரிவுரையாளர் எனக்கூறிய போதும் - பொலிஸார் தன்னைத் தாக்கியதாகவும் தெரிவித்த அவர் - தன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், நிலத்தில் வீழ்ந்து படுத்ததாகவும், இதன்போது தன்னைக் கைது செய்து கொண்டு சென்று விசாரணையின் பின்னர் மன்னிப்புக் கோரி விடுதலை செய்யப்பட்டதாகவும் விரிவுரையாளர் இளம்பிறையன் தெரிவித்தார்.

1995ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் பொலிஸார் பல்கலைக்கழக வளாகத்துக்குள் அத்துமீறி நடந்துகொண்ட சம்பவம் குறித்து பல்கலைக்கழக சமூகம் விசனம் தெரிவித்துள்ளது.

## நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு —

புங்குடுதீவில் இளம் பெண் படுகொலை மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான படையினரின் தாக்குதல்களைக் கண்டித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது இரா.சம்பந்தன் இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இதையடுத்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையின் மையப்பகுதிக்கு சென்று கூடி இராணுவ வன்முறைகளுக்கு எதிராக கோசம் எழுப்பினர். இதையடுத்து சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

## பேச்சுக்களை...

சமாதானப் பேச்சுவார்த்தைகள், ஒஸ்லோவிலோ அல்லது வேறெந்த ஐரோப்பிய நாடுகளிலோ நடத்தப்படுவதனை தாம் எதிர்ப்பதாக ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி - சமாதானப் பேச்சுவார்த்தையை ஐரோப்பிய நாடுகளிலோ, ஒஸ்லோவிலோ நடத்த முடியாதெனவும், இலங்கையில் அல்லது ஆசிய நாடொன்றிலேயே நடத்துவதற்கு தான் உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, அண்மையில் ஹொங்கொங்கில், நோர்வே வெளியுறவு அமைச்சருடன் தான் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்த விபரங்களையும் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பாக விரைவில் கூடி ஆராய்வதென இரண்டு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர். எனினும், அடுத்த இரண்டு தினங்களுக்குள் இரு பகுதியினருக்குமிடையிலான சந்திப்புகள் இடம்பெறுமென கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றைய சந்திப்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த, ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா, பிரசார செயலாளர் விமல் வீரவன்ச மற்றும் ஜே.வி.பியின் செயற்குழு உறுப்பினர் அனுர திஸநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கூரிய ஆயுதத்தால்...

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள அம்பன் முகாமைச் சேர்ந்த அஜித் குமார என்ற சிப்பாய் மீது இனந்தெரியாத நபர்கள் கூரிய ஆயுதத்தினால் வெட்டிக்காயப்படுத்தினர்

படுகாயமடைந்த சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவருகிறது.

இதேவேளை - நேற்றுக்காலை 9 மணி முதல் 11 மணிவரை மணற்காட்டு இராணுவத்தினர் சுற்றி வளைப்புத் தேடுதல் மேற்கொண்டனர்.

## ஓட்டோ சாரதிகளின் மறியலில் படையினர் துப்பாக்கி பிரயோகம்

யாழ்ப்பாணம் —

பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிவழிப் பேரணியின்போது ஓட்டோசாரதி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்.நகரில் ஓட்டோ சாரதிகள் நடத்திய கண்டனப் பேரணியை படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலைத்தனர்.

யாழ்.நகரில் நேற்று மாலை 3.30 மணியளவில் நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டோ சாரதிகள் தமது வாகனங்களால் ஸ்டான்லி வீதி, கஸ்தூரியார் வீதி ஆகியவற்றை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். அங்கு வந்த இராணுவத்தினர் ஓட்டோ சாரதிகள் மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்தினர்.

நூற்றுக்கும் மேலதிகமான படையினர் அந்த இடத்தில் குவிக்கப்பட்டு போர்க்களமாக்கினர். இந்தத் தாக்குதலில் ஓட்டோ சாரதிகள் தாக்கப்பட்டதுடன், அவர்களது வாகனங்களும் சேதமாக்கப்பட்டன.

படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பேரணியில் கலந்து கொண்டோரை விரட்டியடித்ததுடன், வீதியால் பயணம் செய்தோரையும் தாக்கினர். இதனால் யாழ்.நகரப் பகுதி வெறிச்சோடியதுடன், கடைகளும் இழுத்து மூடப்பட்டன. நேற்று மாலைவரை யாழ்.நகரப்பகுதியில் பதற்றம் நிலவியது. பஸ்போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே இடம்பெற்றன.

## சாவகச்சேரி தாக்குதல்...

படையினர் மீது இரண்டு கிரனேட்டுக்களை வீசிய பின்னர் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டதாக படைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இராணுவச் சிப்பாய் குணவர்த்தன யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலின் பின்னர் இராணுவத்தினரும், பொலிஸாரும் பவல் கவச வாகனத்தின் உதவியுடன் தேடுதல் நடத்தினர். வீதியால் சென்ற மக்களை கடுமையாக சோதனைக்குட்படுத்தியதுடன் சிலர் தாக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து கண்டி வீதியூடான போக்குவரத்து சிலமணிநேரம் பாதிப்படைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (91)

## யாழ்.சிவன் கோவிலடியில்...

சந்திக்கருகே உள்ள இராணுவ முகாம் மீது நேற்றுப் பிற்பகல் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

பிற்பகல் 1 மணியளவில் இராணுவக் காவலரண் மீது வீசப்பட்ட குண்டு இலக்குத் தவறி அருகிலுள்ள பற்றைக்குள் வீழ்ந்து வெடித்தது. இதனால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதையடுத்து கச்சேரியடி மற்றும் கண்டிவீதிப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அத்துடன், இந்தவீதியூடாக போக்குவரத்துச் செய்த பொதுமக்கள் பலரும் படையினரால் தாக்கப்பட்டனர். இதனால் இந்த இடத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதேவேளை நேற்றிரவு 8 மணியளவில் ஆரியகுளம் சந்திப் பகுதி மற்றும் காங்கேசன்துறை வீதிப் பகுதியிலும் படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததால் பதற்றமான சூழல் நிலவியது. (55)

## அரசும் புலிகளும்...

நிறுத்த உன்படிக்கையை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து நான் வலியுறுத்தி விளக்கினேன். எந்த இடத்தில் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்பது முக்கியமில்லை.

விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும், சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ளும் ஒரு இடத்தில் பேச்சுவார்த்தையை நடத்தலாம். எனவே, இடம் குறித்து விவாதிப்பதை விடுத்து மிக விரைவில், பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனக் கூறினேன்.

பிரஷல்ஸ் கூட்டத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையை அவர் ஏற்கனவே வாசித்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து அவர் நன்கு அறிந்து வைத்திருந்தார். விடுதலைப் புலிகளுடனோ, இலங்கை அரசுடனோ நாம் கலந்துரையாடிய விடயங்களை, அவர்கள் தந்த பதில்களை நான் வெளியிடவிரும்பவில்லை.

அனுசரணையாளர்கள் என்ற ரீதியில் அவர்கள் எம்மிடம் தெரிவித்த விடயங்களை இரகசியமாக வைத்திருக்கவேண்டியது எமது பொறுப்பு. ஆதலால், அது குறித்து விவாதிக்க நான் விரும்பவில்லை.

இலங்கையில் தப்பபிப்பிராயம் ஒன்று இருந்து வருகிறது. அதனை நிவர்த்தி செய்ய நாம் விரும்புகிறோம். நோர்வேயில் பேச்சுவார்த்தை நடத்தவே நோர்வே ஆர்வமாக இருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால் அது தவறு.

சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளும் உடன்படும் எந்தவொரு இடத்திலும் பேச்சை நடத்த நாம் எமது இணக்கத்தைத் தெரிவித்திருக்கிறோம்.

பேச்சு நடக்கும் இடம் ஆசியாவில் இருந்தாலென்ன? ஐரோப்பாவில் இருந்தாலென்ன? அல்லது உலகின் வேறொரு பாகத்தில் இருந்தாலென்ன? எதற்கும் நாம் சம்மதம். ஆனால், முக்கியமான விடயம் என்னவெனில் போர் நிறுத்தம் சீர்குலையாமல் பாது காத்துக்கொள்வது குறித்து இரண்டு தரப்பும் உடனடியாகவே பேசவேண்டும்.

அண்மைக் காலமாக நிலைமை மிக மோசமாகிச் செல்கிறது. அண்மையில் பல மோசமான வன்முறைகள் நடந்துள்ளன எனத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.12.2005 அன்று பொன்னுத் துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.